Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 கார்த்திகை 07 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றம்ழான் 28 (23.11.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ் :54

பல், மூக்குக் கண்ணாடியகம்

- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.

(1962 முதல் யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக 1995 வரை இயங்கியது)



(சி-1761)

## பல்கலை மாணவரின் அலங்கார வளைவை வாகனத்தால் மோதி சேதப்படுத்திய படையினர்!

### பரமேஸ்வராச் சந்தியில் நேற்றிரவு பதற்றம்

(யாழ்ப்பாணம்)

பலாலி வீதி - பரமேஸ்வராச் சந்தியில் யாழ். பல்கலை மாணவர்களால் அமைக்கப் பட்டிருந்த மாவீரர்தின வளைவை, நேற்றிரவு படையினர் ட்ரக் மூலம் மோதி நொருக்கியதுடன், அப்பகுதியிலிருந்த தளபாடங்களும் அடித்து நொருக்கப்பட்டன. அத்துடன, சம்பவ இடத்தில் - தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த, படைச் சிப்பாய் ஒருவரின் துப்பாக்கி வெடித்ததில், படையினர் ஒருவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, நேற்று முன்தினம் பரமேஸ்வராச் சந்தியில் யாழ். பல்கலைக்கழக மாணவர் அமைத்த மாவீரர் தின வளைவை அகற்றுவதற்கு படையினர் முயன்றவேளை- பல்லைக்கழக மாணவர்கள் மற்றும் கண்காணிப்புக் குழுவினரின் தலையீட்டால் அந்த முயற்சி கைவிடப்பட்டது. அத்துடன் வாகனங்கள் (10 ஆம் பக்கம் பார்க்க)

### சர்வதேச மாணவர் பேரவை பொலிஸாரால் சோதனை!

சர்வதேச மாணவர் பேரவை - இன்று அதிகாலை 1.30 மணியளவில் பொலிஸாரால் சுற்றி வளைக்கப்பட்டதுடன், அங்கிருந்த இரு மாணவர்கள் தாக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, இன்று அதிகாலை (10 ஆம் பக்கம் பார்க்க)

## நாலாயிரம் திருவுருவப் படங்களைக் கொண்ட மாவீரர்களின் நினைவாலயம் மட்டக்களப்பில் திறந்துவைப்பு!



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இது வரை காலமும் வீரச்சாவடைந்த 4000 மாவீரர்களது உருவப்படங்கள் தாங்கிய நினைவாலயம், நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

நேற்றுக் காலை 9 மணிக்கு மட்டக்களப்பு மகாஜனாக் கல்லூரியில் நடைபெற்ற, இந்த நிகழ்வில், நினைவாலயத்தை மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் திறந்து வைத்தார்.

இதேவேளை -

எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெற (10 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகளுடன் பேச்சினை ஆரம்பிக்க பாதுகாப்பு, உள்துறை அமைச்சுகள் அவசியம்!

## ஜனாதிபதியுடன் அடுத்தவாரம் பேசப்போவதாக பதவியாவில் வைத்து பிரதமர் ரணில் தெரிவிப்பு!

(வவுனியா)

**விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்தும்போது, பாதுகாப்பு மற்றும் உள்துறை அமைச்சுக்கள் அரசாங்கத்திடம் இருக்கவேண்டும். இந்த இரண்டு அமைச்சுக்களையும் ஜனாதிபதி பொறுப்பேற்றதால், சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் சிக்கல் எழுந்துள்ளது.**

**இந்த அமைச்சுகளை மீளப்பெறும் விவகாரம் தொடர்பாக அடுத்த வாரம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் பேச்சு நடத்தப்போவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

மணலாறு - பதவியாவில் சிறிபுர ரஜமகா விகாரையில் நேற்று நடந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதமர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

நாட்டில் நடக்கும் பிரதான பிரச்சினையை யுத்தமின்றி பேச்சுக்களின் மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும். இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். (10 ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடிப்படையினருக்கு விசேட பயிற்சித் திட்டம்!

(கொழும்பு)

பொலிஸ் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்தோருக்கு விசேட பயிற்சித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவிருப்பதாக, பொலிஸ் திணைக்கள வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

பதில் பொலிஸ் மா அதிபர் இந்திரா டி சில்வா இந்த விசேட பயிற்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான(10 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுகள் மீள ஆரம்பிக்கப்படும் வரை

மணலாறு - பதவியாவில் சிறிபுர ரஜமகா விகாரையில் நேற்று நடந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதமர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

நாட்டில் நடக்கும் பிரதான பிரச்சினையை யுத்தமின்றி பேச்சுக்களின் மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும். இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். (10 ஆம் பக்கம் பார்க்க)

# பிரதான கட்சிகள் இரண்டையும் இணைக்கும் பணியில் ஜனாதிபதி!

(கொழும்பு)

நாட்டின் நலன்கருதி இரண்டு பிரதான கட்சிகளையும் ஒன்றிணைக்கும் பணிகளில் ஈடுபட்டிருப்பதாக, ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இது மிகவும் முக்கிய பொறுப்பாக இருந்த போதும், இதனை செய்து முடிக்க முயற்சி மேற்கொள்வதாக அவர் குறிப்பிட்டார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற கல்விசார் நிகழ்வொன்றில் ஜனாதிபதி பங்கேற்று உரையாற்றினார்.

தம்மீது எந்தவித குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டாலும் ஐக்கிய இலங்கையின் இலட்சியத்துக்காகப் பாடுபடப்போவதாகவும், இந்த முயற்சிக்கு (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி - பிரதமருக்கு இடையிலான

# அரசியல் நெருக்கடிக்குத் தீர்வுகாண ஆலோசகர்கள் இரகசியச் சந்திப்பு!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு எட்டுவதற்கான இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்காக இரகசியப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

ஜனாதிபதிக்கு விசுவாசமான அதிகாரி ஒருவரும், ஐக்கிய தேசிய முன்னனியின் பிரபல அரசியல்வாதி ஒருவருமே இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இவர்களுடன் பல்கலைக்கழக பேராசிரியர்கள் சிலரும் ஈடுபட்டுள்ளனர்.

சுதந்திரக்கட்சிக்கும் ஐக்கிய தேசிய முன்னணிக்கும் இடையில் அவர்களின் கோரிக்கைள் பாதிக்காத வகையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவது.

ஜனாதிபதி தம்வசம் எடுத்துள்ள ஊடகத்துறை, பாதுகாப்பு, (10 ஆம் பக்கம் பார்க்க)

(10 ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுகள் மீள ஆரம்பிக்கப்படும் வரை இலங்கைக்கு ஒட்டுணு வரமாட்டாராம்!

(நியுயோர்க்)

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் மீளவும் ஆரம்பிக்கப்படும்வரை - தான் இலங்கைக்கு விஜயம்செய்யப் போவதில்லை என்று ஐ.நா.சபையின் சிறுவர் உரிமைகள் தொடர்பான விசேட பிரதிநிதி ஒலரா ஒட்டுணு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து நியுயோர்க்கில் ஒலரா ஒட்டுணு கருத்து வெளியிடுகையில், சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படாத சூழ்நிலையில், இலங்கைக்கு விஜயம்செய்வதில் எந்தப் பிரயோசனமும் கிடைக்கப் போவதில்லை எனத் தெரிவித்தார்.

ஐ.நா. செயலாளர் கோபி அனானின் - சிறுவர் உரிமைகள் தொடர்பான விசேட பிரதிநிதியான ஒலரா ஒட்டுணு, இந்த வருடம் இலங்கைக்கு விஜயம் செய்யவிருந்தார். ஆனால், அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையிலான (10 ஆம் பக்கம் பார்க்க)

# நாடாளுமன்றத்தை கலைக்கமாட்டேன்; வர்த்தகர்களிடம் சந்திரிகா உறுதிமொழி!

(கொழும்பு)

சந்தர்ப்ப சூழ்நிலைகளால் நிர்ப்பந்தம் ஏற்பட்டாலன்றி நாடாளுமன்றத்தைக் கலைக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வர்த்தக சமூகத்திடம் உறுதியளிததுள்ளார்.

நேற்று முன்தினம் பல்வேறு வர்த்தக சமூகப் பிரதிநிகள் மற்றும் துறைசார் நிபுணர்களுடன் நடத்திய கூட்டம் ஒன்றிலேயே ஜனாதிபதி இந்த உறுதிமொழியை வழங்கினார்.

இந்தக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தவும் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கவேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்.

இனப்பிச்சினைத் தீவு விவகாரத்தில் இரு பிரதான கட்சிளும் முறுகல் நிலையைத் தொடர்ந்து பேணுவதால் நாட்டின் பொருளாதாரம் 'பின் நோக்கிய நிலையில் சென்றுகொண்டிருக்கிறது.

தனியான தேசிய அரசு மூலம் தற்போது நாட்டில் தொடர்ந்து கொண்டிருக்கும் அரசியல் வன்செயல்கள் மற்றும் பொதுவான பிரச்சினைகள் ஆகியவற்றுக்குத் தீர்வுகாண முடியாது என்பது உயர்ந்தளவு நம்பிக்கையாகும்.

இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண ஒரேவழி நாட்டின் கல்விச் செயற்பாட்டில் சீர்திருத்தத்தைக் (10 ஆம் பக்கம் பார்க்க)

நாட்டின் சகல பாடசாலைகளிலுமுள்ள

# ஆளணியினர் பிரச்சினைகளை தீர்க்க கல்வி அமைச்சு துரித நடவடிக்கை

நாடு பூராகவுமுள்ள பாடசாலைகளில் ஆளணியினரின் பிரச்சனைகளைத் துரிதமாகத் தீர்ப்பதற்கு, பாடசாலை கல்வி அமைச்சினால் தகவல்கள் திரட்டப்படட்டு வருவதாகத தெரிவிக்கப்படுகின்றது.

பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர், ஆசியர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதாக அதிபர், ஆசிரியர் சங்கங்கள் அமைச்சிடம் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்தே, இத்தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றது எனக் கூறப்படுகின்றது.

பாடசாலைகளில் கடமையாற்றும் இலங்கைக் கல்வி நிர்வாக சேவை, இலங்கை அதிபர் சேவை, இலங்கை ஆசிரியர் சேவைக்குரிய ஆசிரியர்கள், மற்றும் தொண்டர் ஆசிரியர்கள் கடமையாற்றின- அவர்கள் தொடர்பான தகவல்கள், கல்விசாரா ஆளணியினரது தனிப்பட்ட, உத்தியோக தகவல்களை உள்ளடக்கிய, படிவத்தினை பூரணப்படுத்தி, பாடசாலை அதிபர்களை "மேலதிக செயலாளர் (நிதி, நிர்வாகம்) பாடசாலைக்கல்வி அமைச்சு, இசுறுபாய பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளனர். (83)

## தரம் ஐந்து மாணவர்களுக்கு மாதிரிப்பரீட்சை

புன்னாலைக்கட்டுவன் தெற்கு கணேச சனசமூக நிலையத்தினரால், இந்த ஆண்டு தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவச முன்னோடிப் பரீட்சை இன்று பிற்பகல் 2 மணிக்கு புன்னாலைக்கட்டுவன் அ.த.க. பாடசாலையில் நடத்தப்படவுள்ளது.

அத்துடன், சனசமூக நிலையத்தினரால் இம்மாணவர்களுக்கென, கடந்த ஒருமாதகாலமாக - சனி, ஞாயிறு நாட்களில் இலவச கருத்தரங்கும் நடாத்தப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

கருத்தரங்கில் பங்குபற்றாத மாணவர்களும் இந்தப் பரீட்சையில் பங்குபற்றலாமென, நிலைய செயலாளர் தெரிவித்துள்ளார். (83)

## மீன்பிடியியல் டிப்ளோமா கலந்துரையாடல்

யாழ்.பல்கலைக்கழக மீன்பிடியியல் டிப்ளோமா கற்கைநெறி 1ஆம், 2ஆம், 3ஆம் அணி மாணவர்களுக்கான "மீன்பிடியியல் விஞ்ஞானக் கற்கைநெறி" தொடர்பான கலந்துரையாடல் நாளை காலை 10 மணிக்கு கடல்வள அபிவிருத்தி நிலைய விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் "மீன்பிடியியல் விஞ்ஞானக் கற்கைநெறி" சம்மந்தமான முக்கிய முடிவுகள் எடுக்கப்படவுள்ளதால் சகல அணி மாணவர்களையும் தவறாது கலந்துகொளளுமாறு, 3 ஆம் அணித்தலைவர் எஸ்.வீரசுதாகரன் தெரிவித்துள்ளார்.

## குடாநாட்டில் சமாதான நீதிவான்களாக மேலும் 284 பேர் நியமனம்

யாழ்.மாவட்டத்தில் சமாதான நீதிவான்களாக 284 பேர் நீதியமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களது சமாதான நீதிவான் பதவிக்கான சிபார்சினை, இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் வழங்கியிருந்தார்.

நியமனம் பெற்ற சமாதான நீதிவான்களுக்கான நியமனக்கடிதம், இன்று இந்து கலாசார அமைச்சரின் இல்லத்தில் வைத்து வழங்கப்படுமென அமைச்சின் பொது தொடர்பு அலுவலர் மு.கிருஷ்ணன் தெரிவித்தார்.

## பெயர்மாற்ற அறிவித்தல்

யாழ்.மாவட்டம் கட்டைவேலிப் பிரிவில் செல்லன் - கிட்டிணன், நீலன் - மதுரம் ஆகிய பெற்றோருக்கு 07.01.1984இல் நான் பிறந்தேன். எனது பிறப்புச் சான்றிதழ் பதிவு இலக்கம் 4199 என்பதாகும். 12.03.1984 இல் பதிவுசெய்யப்பட்ட மேற்படி சான்றிதழில் எனது பெயர் கொபுலன் எனப் பதியப்பட்டிருக்கிறது. இப்பெயர் பொருத்தப்பாடுடையதல்லவென நான் கருதுவதால் கண்ணன் என்று எனது பெயரை மாற்றம் செய்கின்றேன் என்வும், இன்று தொடக்கம் (23.11.2003) அரச ஆவணங்களிலும் மற்றும் பதிவுகளிலும் கண்ணன் என்ற பெயரையே உபயோகித்து வருவேன் என்பதையும் இத்தால் இலங்கை அரசினர்க்கும் சகல பொது மக்களுக்கும் பகிரங்கமாக அறியத்தருகின்றேன்.

கி.கண்ணன்
மானாங்கானை,
வல்வெட்டித்துறை. (531)

# கியூடெக் நிறுவன உதவியுடன் யுவதிகளுக்கான கருத்தரங்கு!

(யாழ்ப்பாணம்)

கியூடெக் நிறுவனத்தின் உயிர்ப்பூட்டல் குழுவினரால் யுவதிகள் இளைஞர்களுக்கான முழுநாள் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

சமாதானக்கல்வி, சமூக விழிப்புணர்வு, சமூகமேம்பாடு அபிவிருத்தி தொடர்பான செயற்திட்டங்களில் - ஒவ்வொரு கிராமமாக விழிப்புணர்வு கருத்தமர்வுகள் இடம் பெற்று வருகின்றன. இதன் தொடர்சியாக கொட்டடி மகளிர் குழுவிற்கான கருத்தமர்வு, கியூடெக் உயிர்ப்பூட்டல் பெண்கள் குழுவினரால், முழுநாள் கருத்தரங்காக இன்று செல்வி யோ.சுபோதினி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் 'சமூகமேம்பாட்டில் பெண்கள்' எனும் தலைப்பில் செல்வி ஏமி கருத்துரை வழங்குவார்.

இளைஞருக்கான முழுநாள் சமாதான தலைமைத்துவக் கல்விக் கருத்தரங்கு - உடுவில் செம்மலை அன்னை ஆலயத்தில் அமிலட்டன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இதில் அருட்திரு ஏ.எவ்.பெனற் 'சமாதான தலைமைத்துவத்தில் இளைஞர்' எனும் கருப்பொருளில் உரையாற்றவுள்ளார். சரோன், யூகின் ஆகியோரும் உரையாற்றுவர்.

## 101 ஆவது பிறந்தநாள் நினைவுப் பேருரை

(கந்தரோடை)

கந்தரோடை ஸ்கந்தவரோதயா கல்லூரியின் முன்னாள் அதிபர், ஒபரேற்றர் சுப்பிரமணியத்தின் 101 ஆவது பிறந்தநாள் நினைவாக, நினைவுப் பேருரை நாளை காலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் க.சிவாஜி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நினைவுரையினை, கல்லூரியின் முன்னாள் அதிபர் சி.சிவராஜாவும் தமிழ் 'வாழ்வியலிற் பனை' எனும் தலைப்பில் நினைவுப் பேருரையினை கலாநிதி எஸ்.சிவலிங்கராஜாவும் ஆற்றவுள்ளனர்.

## மின்கம்பங்கள் கொள்வனவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபையின் யாழ்.அலுவலகம் சீமெந்து கூட்டுத்தாபனத்தால் உற்பத்தி செய்யப்படும் அனைத்து மின்கம்பங்களையும் கொள்வனவு செய்வதாக, சீமெந்து கூட்டுத்தாபன பொறியியலாளரான எ.ஜெயபாலசந்திரன் அறிவித்துள்ளார்.

## எழுவைதீவுப் பகுதியில் கால்நடைகள் திருட்டு

(புன்னாலைக்கட்டுவன்)

எழுவைதீவு வடக்குப் பிரதேசத்தில் அண்மைக்காலமாக கால்நடைகள் அதிகளவில் திருடப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இங்குள்ள ஆடு, கோழி முதலானவையே அதிகளவில் இறைச்சிக்காக திருடப்பட்டுவருகிறது.

திருடப்படும் கால்நடைகளை, இரவோடு இரவாக குடிமனைகள் அற்ற பகுதிகளுக்கு கொண்டு சென்று வெட்டுவதாகவும், காலை வேளையில் அவ்வழியால் பயணம் செய்வோர் கால்நடைகளின் எச்சங்களைக் காணக்கூடியதாக உள்ளதாகவும் கூறப்படுகிறது.

அண்மையில் சி.கதிரவேலு என்பவரின் 3500 ரூபாய் பெறுமதியான இரண்டு ஆட்டுக்கடாக்கள் திருடப்பட்டுள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டப்படத்தக்கது. (83)


நிறைஞ்சனலக்ஸ் சங்கானை
ராஜேஸ், ஸ்ருதிகா நடித்த
ஆல்பம்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
DOUBLE JEOPARDY

ராஜா யாழ்ப்பாணம்.
லக்கிஸ்ரார் அஜித், மீராஜஸ்மீன், கபாலி நடித்த
ஆஞ்சநேயா
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)


## வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் விசேட அறிவித்தல்

கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவு பொதுக்கூட்டம் 26.11.2003 புதன்கிழமை காலை 10 மணிக்கு யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் நடைபெறும். கழக அங்கத்தவர்கள் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(தனிப்பட்ட அறிவித்தல் அனுப்பப்படமாட்டாது)

வதிரி, கரவெட்டி (530) செயலாளர்

## நமது ஈழநாடு நடத்திய தரம் ஐந்து மாணவர்களின் மாதிரிப் பரீட்சைப் பெறுபேறுகள்

| பெயர் விபரம் | மொத்த புள்ளிகள் |
|---|---|
| **யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்** | |
| 154. நா.காமினி | 103 |
| 155. தி.ஷபீதா | 127 |
| 156. பா.துசாந்தி | 118 |
| 157. கா.நிரோசனா | 100 |
| 158. பு.கிசோக் | 100 |
| 159. இ.ஹரிப்ரசாத் | 100 |
| 160. மோ.மயூரி | 124 |
| 161. ச.நந்துஜா | 130 |
| 162. ர.நிஷாந்தினி | 113 |
| **யா/இந்து ஆரம்ப பாடசாலை** | |
| 163. சி.தனுசா | 144 |
| 164. ச.சோபிதா | 111 |
| 165. ப.மயூரி | 109 |
| 166. பா.தேனுஜா | 128 |
| 167. அ.ஷாம்வி | 125 |
| 168. வி.கீர்த்தனா | 125 |
| 169. செ.தனுரேகா | 118 |
| 170. இ.லமேரிகா | 137 |
| 171. செ.கமலாட்சன் | 148 |
| 172. யி.சிறிநாத் | 137 |
| 173. செ.பிரவீணா | 115 |
| 174. கா.மந்தாகினி | 112 |
| 175. த.சுஜீவன் | 151 |
| 176. யோ.காயத்திரி | 118 |
| **யா/நல்லூர் இ.த.பெ.பாடசாலை** | |
| 177. இ.நிலக்சன் | 102 |
| 178. த.கௌசிகா | 131 |
| 179. தி.தையானேஸ்வரன் | 101 |
| **யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை** | |
| 180. ஆ.குருவாசன் | 100 |
| 181. ப.அபிராமி | 112 |
| 182. இ.துஷானி | 111 |
| 183. இ.யசிந்தா | 112 |
| 184. ப.நிசாந்தினி | 100 |
| 185. செ.அர்ஜின் | 143 |
| 186. பா.கஜலக்ஷன் | 135 |
| 187. பு.சரன்யன் | 101 |
| 188. அ.விமோசனன் | 132 |
| 189. தே.மயூரி | 121 |
| 190. ப.கோபினி | 122 |
| 191. ச.சஞ்சிகா | 110 |
| 192. ம.துவாரகா | 124 |
| 193. செ.கிரிஷாந் | 130 |
| 194. குணாளன் | 100 |
| **யா/பரியோவான் கல்லூரி** | |
| 195. த.சாயிகிருஷ்ணா | 103 |
| 196. அ.அருண்கிளைனஸ் | 101 |
| 197. ஏ.கௌசிகன் | 100 |
| 198. ரீ.பிரசொந்தன் | 103 |
| 199. எஸ்.லக்ஷன் | 106 |
| 200. என்.பிரசன்னா | 100 |
| 201. சி.அனோஜ்முத்துக்குமார் | 114 |
| 202. கே.விசாகன் | 107 |
| 203. சி.கஜந்தன் | 112 |
| 204. என்.அனுசுதன் | 121 |
| 205. க.சிந்துஜன் | 123 |
| 206. கு.டிசாந்த் | 107 |
| 207. ரீ.பிரணவரூபன் | 102 |
| **யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை** | |
| 208. சி.சதாநந்தினி | 116 |
| 209. ச.சோபியா | 110 |
| 210. பு.சிந்துஜா | 122 |
| 211. ர.ஸ்ரீசந்திரிகா | 117 |
| 212. சி.சித்திராங்கி | 124 |
| 213. நா.நிருஷா | 124 |
| 214. எஸ்.பக்தஜனனி | 130 |
| 215. சி.தர்மேகா | 113 |
| 216. கு.குணாவினி | 102 |
| 217. சி.சோபிகா | 113 |
| 218. யோ.துக்ஸ்சாயினி | 125 |
| 219. இ.கோபிகா | 144 |
| 220. இ.பவித்திகா | 129 |
| 221. பு.சுமிதா | 127 |
| 222. ம.பரணிகா | 111 |
| 223. சு.கிருஷிகா | 111 |
| 228. க.ஹரித்தனா | 128 |
| **யா/சென்.பொனிக்பேஸ் றோ.க.த.க. பாடசாலை** | |
| 229. த.சத்தியப்பிரசாத் | 100 |
| 230. சி.சாருஜன் | 113 |

(தொடரும்)



முற்றிலும் JAPAN தயாரிப்பான Sony, National T.V க்கள் 14", 16", 19", 20", 21", 25", 26", 29" மற்றும் வீடியோ டெக், செற்றப் ரேடியோக்கள் அதற்கான உதிரிப்பாகங்களும் சிங்கப்பூரிலிருந்து தருவிக்கப்பட்டு மலிவான விலையில் விற்பனைக்குண்டு என்பதனை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
நீங்கள் நாடவேண்டிய இடம்
SHAN MULTI TRADE CENTRE
(சி-1821)

150, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

# தேசியத் தலைவரின் மாவீரர்தின உரையை சர்வதேச சமூகம் ஆவலுடன் எதிர்பார்க்கிறது

## இராஜதந்திரிகள் தெரிவிப்பு

மாவீரர் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 27 ஆம் திகதி தமிழீழ



தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆற்றவிருக்கும் உரையை உலகெங்கிலும் வாழும் தமிழ் மக்கள் மட்டுமன்றி, தென்னிலங்கையில் வாழும் சமாதானத்தின்மீது பற்றுக்கொண்ட சிங்களமக்களும், சர்வதேச சமூகமும் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது என, இராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்து அச்சம் கொண்டிருக்கும் இந்திய அரசியல்வாதிகளும், மாவீரர்தின உரையைக் கூர்மையுடன் அவதானிக்கவுள்ளதாக இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழீழ தேசியத் தலைவரின் மாவீரர்தின உரையின் முக்கியத்துவம் குறித்து - நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இந்தியாவில் வைத்து குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச சமூகத்தினதும், தென்னிலங்கையின் அரசியல் நெருக்கடிகள் குறித்த அடிப்படைக் காரணிகளை ஆராய்வதன்மூலம் இன்றைய சர்வதேச சூழலில் - தமிழீழத் தேசியத் தலைவரது உரை குறித்து ஆய்வாளர்கள் சில வரையறைகளை உருவாக்கமுடியும் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளது ஆதிக்கத்திலிருக்கும் சர்வதேச சக்திகள் - இன்று பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதுதான் தங்களது பிரதானமான இலக்கு என்று அறிவித்திருக்கின்றன.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திலும் பயங்கரவாதப்போக்கு இருப்பதாகக் கூறிவரும் அமெரிக்கா, பிரித்தானிய உட்பட ஐரோப்பிய நாடுகள் இன்று ஒரு மாற்றத்திற்கு உட்பட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்த பரிந்துரைகளை - சமாதானப் பேச்சுவார்த்தைக்கான ஆரம்ப நிலையாகக்கொள்ளவேண்டுமென அவை அறிவித்திருக்கின்றன.

ஆனால், ஜனாதிபதி சந்திரிகாவின் முடிவுகள் - சர்வதேச சமூகத்தின் பார்வைக்கு நேர்முரணாக உள்ளது. விடுதலைப் புலிகளின் பரிந்துரைகளை அவர் அடிப்படையாகக் கொள்ளவிரும்பவில்லை என்பது மட்டுமல்ல, அவர் அதனை முற்றிலும் நிராகரித்தும் உள்ளார்.

இலங்கையின் அரசியல் யாப்பின் அடிப்படையில் அவரது அதிகாரங்களைக் குறைப்பதற்கான வாய்ப்புக்களோ அல்லது குறைந்தபட்சம் அவரிடம் கேள்விகேட்கும் உரிமைகள்கூட நீதிமன்றத்திற்கோ அல்லது எவருக்குமோ அறவேயில்லையென உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கள் தெரிவித்துள்ளன.

பாதுகாப்பு, தகவல்துறை மற்றும் உள்துறை அமைச்சு போன்ற உள்நாட்டில் கட்டுப்படுத்தும் அனைத்துத் துறைகளையும் அவரே வைத்திருப்பதன்மூலம் அதிகாரக் குவிப்புச் சக்தியாக அவரே திகழ்கின்றார்.

இலங்கையின் அரசியல் யாப்பை மாற்றாமல், இலங்கையில் எந்த மாற்றமும் சாத்தியமில்லை என்பது மிகத் தெளிவாகத் தெரிவதோடு, சர்வதேச சமூகமும் இந்த அரசியல் யாப்பு நெருக்கடியை மிகத் தெளிவாகப் புரிந்துகொண்டுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வை முன்னெடுத்துச் செல்வதற்கான எந்த அடிப்படைகளும் - யாப்பைத் திருத்துவதன்மூலமும், ஜனாதிபதியின் அதிகாரங்களை விமர்சனத்திற்கு உட்படுத்துவதன்மூலமே சாத்தியம் என்பது - உலக சமூகத்திற்கு இப்போது முழுமையாகத் தெரிந்துவிட்டது.

இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வுக்கு முக்கியமான தடையாக இருப்பது - சிங்களப் பெரும்பான்மையின் நலன்களைக் காப்பாற்றும் அரசியல் யாப்பே என விடுதலைப் புலிகள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தமை, இப்போது நிதர்சனமாகி விட்டது.

இந்நிலையில், இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முட்டுக்கட்டையாக இருப்பவர்கள் சிங்கள் இனவாதிகளும், அவர்களைக் காத்து நிற்கும் சிங்கள அரசியல் யாப்புமே என்பது தற்போது தெளிவாகியுள்ளது.

அதாவது, இலங்கையின் சமாதானப் பந்து இப்போது சிங்கள அரசியல்வாதிகளின் பக்கம் அசையாமல் நிற்கிறது. இந்த சமாதானப் பந்தை நகர்த் துவதும், அழிப்பதும் தற்போது சிங்கள அரசியல்வாதிகளின் கைகளிலேயே தங்கியிருக்கிறது.

இந்நிலையில், தமிழீழ தேசியத் தலைவரின் மாவீரர்தின உரை - சமாதானத்தின் மீதான தமது வேட்கையை வெளியிடும் அதேவேளை, இலங்கையின் அரசியல் யாப்பு நெருக்கடி சார்ந்த அம்சங்களையே அதிகம் வலியுறுத்தும் என ஆய்வாளர்கள் எதிர்வு கூறியுள்ளனர்.

### யாழ். மாவட்டத்தில் சமாதான நீதிவான்களாக 284 பேர் நியமனம்

நீதி அமைச்சினால் சமாதான நீதிவான் பதவிக்கு யாழ். மாவட்டத்திலிருந்து 284 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்து சமய விவகார அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தி.மகேஸ்வரனின் சிபார்சுக்கு அமைவாகவே நீதியமைச்சினால் இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்குரிய நியமனப் பத்திரங்களை இன்று அமைச்சர் தி. மகேஸ்வரனின் இல்லத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

### பேராதனை வளாகத்தில் உணவு பதனிடல் கற்கைநெறி

(கொழும்பு)

அடுத்த வருடத்தில் இருந்து உணவு பதனிடல் தொழிநுட்பம் என்ற பட்டக் கற்கைநெறியை பேராதனைப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

அடுத்த கல்வியாண்டுக்கு அனுமதிபெறும் மாணவர்கள் இந்தக் கற்கைநெறியைத் தொடரமுடியும். இந்தப் பட்டக் கற்கைநெறி பேராதனைப் பல்கலைக்கழக விவசாயப் பீடத்தினால் நடத்தப்படவுள்ளது.

இந்தக் கற்கைநெறியின் அரைப்பகுதி - ஆய்வுகள் மற்றும் சுய கற்கைத் திட்டங்களைக் கொண்டதாக அமைந்திருக்கும் என பல்கலைக் கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# இலங்கையின் அரசியல் உறுதிப்பாட்டுக்கு அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபடவேண்டும்

## அமெரிக்க முதலீட்டாளர்கள் கோரிக்கை

இலங்கையில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கு, அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட்டுச் செயற்பட முன்வரவேண்டும் என்று, அமெரிக்காவின் முன்னணி முதலீட்டாளர்கள் கோரியுள்ளனர்.

அமெரிக்காவின் முன்னணி வர்த்தக முதலீட்டாளர் குழுவொன்று தற்போது கொழும்பு வந்துள்ளது. இந்தக் குழுவினர் - இலங்கையில் தமது முதலீட்டினை விஸ்தரிப்பது குறித்தும், புதிய துறைகளில் முதலீட்டுக்கான வாய்ப்புக்கள் குறித்தும் ஆராய்ந்து வருகின்றனர்.

அந்தக் குழுவில் - குளோரியா வெண்டவில்ட் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் அடங்குவார்.

இந்த நிறுவனத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பல்வேறு உற்பத்திகள் மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது.

# இலங்கையின் சமாதான முயற்சிகளில் அரசு தனித்துச் செயற்படவில்லை!

## ஐரோப்பிய ஒன்றிய ஆணையாளர் கிறிஸ் பற்றன்



இலங்கை அரசு சமாதான முயற்சிகளில் தனித்துச் செயற்படவில்லை என, ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார ஆணையாளர் கிறிஸ்தோபர் பற்றன் தெரிவித்துள்ளார்.

நாளை மறுதினம் இலங்கைக்கு மேற்கொள்ளவிருக்கும் விஜயம் குறித்து தனது கருத்தை வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சமாதான முயற்சிகள் ஆக்கபூர்வமாக முன்னெடுக்கப்பட்டுவருவது குறித்து, தான் மகிழ்ச்சி அடைவதாகத் தெரிவித்துள்ள கிறிஸ்தோபர் பற்றன், இந்த முயற்சிகளில் மிகவும் முக்கியமான ஒரு காலகட்டத்தில்- அரசியல் முரண்பாடுகள் தோன்றியிருப்பது குறித்துக் கவலை தெரிவித்தார்.

2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் - போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டபோது, இலங்கைக்கு மிகவும் பிரகாசமான ஒரு எதிர்காலம் இருப்பதாகத் தென்பட்டது. இந்த அற்புதமான வாய்ப்பு கைநழுவிப் போகாமல் பார்த்துக் கொள்ளப்பட வேண்டியது அவசியமானது.

அத்துடன், சமாதான முயற்சிகளில் இலங்கை அரசாங்கம் தனித்துச் செயற்படவில்லை எனவும், இந்த முயற்சிகளுக்கான ஆதரவை சர்வதேச நாடுகள் பலவும் மிக உறுதியாக வழங்கிவருகின்றன.

இலங்கையில் போரினால் ஏற்பட்ட இழப்புக்கள் பற்றிக் கருத்து வெளியிடும் பலரும் - 65000 பேர் அதில் கொல்லப்பட்டுள்ளமை குறித்தும், எட்டு இலட்சம் பேர் இடம்பெயர்ந்திருப்பது பற்றியும், இன்னும் ஏழு இல்ட்சம் பேர் புலம்பெயர்ந்திருப்பது பற்றியும், 30,000 பெண்கள் தமது கணவன்மாரை இழந்திருப்பது குறித்தும் குறிப்பிடுகின்றன.

இவையெல்லாவற்றுடனும், பொருளாதாரரீதியாக இலங்கை அடைந்துள்ள பின்னடைவு, மிக அதிகமானது.

1960 ஆம் ஆண்டுகளில் மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுடன் பொருளாதாரரீதியாக ஒப்பிடப்பட்ட இலங்கையில் போர் நடைபெற்றிருக்காவிட்டால், ஏற்பட்டிருக்கக்கூடிய பொருளாதார வளர்ச்சி அதிகமாக இருந்திருக்கும்.

இதேவேளை, கிறிஸ்தோபர் பற்றன் எதிர்வரும் 26 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்து, பேச்சுவார்த்தை நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## டிசம்பர் முதலாம் திகதி

# முஸ்லீம் காங்கிரஸ் யாப்புக் குழுவினர் ஹக்கீம் தலைமையில் இந்தியா விஜயம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் அரசியல் யாப்புக் குழுவினர், முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் எதிர்வரும் டிசம்பர் மாதம் முதலாம் திகதி இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இலங்கையிலுள்ள இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் மோகன்குமார் ஊடாக விடுக்கப்பட்ட உத்தியோகபூர்வ அழைப்பை ஏற்று இக்குழுவினர் இந்தியா செல்லவுள்ளனர்.

சுமார் ஒருவார காலம் இந்தியாவில் தங்கியிருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் அரசியல் யாப்புக் குழுவினர் - டார்ஜிலிங், லடாக் போன்ற பிரதேசங்களில் சிறுபான்மை சமூகத்தினருக்கு விசேட சுயாதீன அரசியல் அதிகாரப் பரவலாக்கல் எவ்வாறு அமுல்படுத்தப்பட்டுள்ளது என்பது குறித்து அறிந்துகொள்ளவுள்ளனர்.

இக்குழுவினர் கடந்தமாதம் இங்கிலாந்து, அயர்லாந்து, ஸ்கொட்லாந்து ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்து அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான விபரங்களை அறிந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இந்தியாவிற்கான விஜயம் தொடர்பாக ஆராயும் விசேட கூட்டமொன்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் கொழும்பில் இன்று நடைபெறவுள்ளது.

# மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு மாணவரிடையே வினாடிவினா போட்டிகள்

மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு மாணவர் மத்தியில் வினாடிவினா மற்றும் பட்டிமன்றப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் உள்ள ஐந்து வலயங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் ஐம்பது பேர் தெரிவு செய்யப்பட்டு, அவர்களிடையே சில முன்னேற்பாட்டு வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு, அதன் பின்னர் அவர்கள் மத்தியில் வினாடிவினாப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இந்தப் போட்டி எதிர்வரும் டிசம்பர் மாதம் 6 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் டிசம்பர் மாதம் 1 ஆம் திகதி - சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில், 8 பாடசாலையைச் சேர்ந்த மாணவகுழுக்களிடையே மனித உரிமைகள் தொடர்பான பட்டிமன்றப் போட்டியும் இடம்பெறவிருப்பதாக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தின் நிகழ்ச்சித் திட்டமிடல் அதிகாரி வி. வேளினி தெரிவித்துள்ளார். (ப)

### சுகாதார ஊழியர் மீண்டும் வேலைநிறுத்தம்

சுகாதார சேவை ஊழியர் மீண்டும் வேலைநிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக எச்சரித்துள்ளனர்.

தமது சம்பள முரண்பாட்டினை தீர்க்கும் வகையிலான ஏற்பாடு நவம்பர் மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னர் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டிருந்தது.

எனினும், அரசு இதுவரை காலமும் இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே சுகாதார சேவை ஊழியர் மீண்டும் 25 ஆம் திகதி முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர்.

# இலங்கை -அமெரிக்க விமானப்படை நிபுணத்துவ உதவிகள் பரிமாற்றம்

இலங்கை விமானப்படைக்கும், அமெரிக்க விமானப்படைக்கும் இடையிலான நிபுணத்துவ உதவிகளைப் பரிமாறிக்கொள்ளும் நிகழ்ச்சித் திட்டம் இந்த மாதம் முதல் ஆரம்பிக்கப் படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

30 பேரைக்கொண்ட அமெரிக்க விமானப்படை அணியினர் இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கேற்கவுள்ளனர். 13 ஆவது விமானப்படையின் 613 ஆவது பிரிவைச் சேர்ந்த அமெரிக்கப் படையினரே இந்தத் திட்டத்தில் பங்கேற்கவுள்ளனர்.

உயர்தகமைபெற்ற நிபுணர்களைக்கொண்ட இந்தக் குழுவினர்- 35 வெவ்வேறு விதமான துறைகளைச் சேர்ந்தவர்கள். இவர்கள் - பாதுகாப்பு, மருத்துவம், பொறியியல் நடவடிக்கை என்பவற்றைக் குறித்த தொரு இடத்தில் ஒருங்கிணைப்பது பற்றிய பயிற்சியில் பங்கேற்பர்.

விசேடமாக, நடவடிக்கைக்காக தரையிறக்கப்பட்ட படையினர் - வேகமான தொடர்புசாதன வசதிகளைக் கையாள்வது மற்றும் விரைவாக முடிவெடுத்துச் செயற்படுவது குறித்தும் பயிற்சிகளில் கவனம் செலுத்தப்படும்.

அமெரிக்க நிபுணர் குழுவினர் இலங்கை விமானப்படையுடன் இணைந்து, வான் போர்க்களம் தொடர்பான கூட்டு ஆய்வு ஒன்றிலும் ஈடுபடவுள்ளனர் என்று அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்கும் இலங்கைக்குமிடையிலான மிக நெருக்கமான இராணுவ ஒத்துழைப்பின் ஒரு கட்டமாகவே இந்த நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது.

# இராணுவ அச்சுறுத்தல்களுக்கு அடிபணியாது மாவீரர் தினத்தை மக்கள் அனுஷ்டிப்பர்

## யாழ்.மாவட்ட நிர்வாகசேவைப் பொறுப்பாளர் விஜிதரன்

இராணுவ அச்சுறுத்தல்களுக்கு அடிபணியாது, மாவீரர் தினத்தை மக்கள் உணர்வோடு அனுஷ்டிப்பர் என - யாழ்.மாவட்ட நிர்வாகசேவைப் பொறுப்பாளர் விஜிதரன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தில், நேற்று முன்தினம் நடைபெற்ற மாவீரர்தின நிகழ்வுகளில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்த நிகழ்வில், விஜிதரன் தொடர்ந்து உரையாற்று கையில் -

மாவீரர்தினக் கொண்டாட்டங்களைத் தடுப்பதற்கு இராணுவம் பல வழிகளிலும் முயன்று வருகிறது. ஆனால், எமது மக்கள் அவற்றுக்கு அஞ்சாது, தமது பணிகளை முன்னெடுத்துச் செல்வார்கள். இதையிட்டு நாம் மிக்க மகிழ்வடைகின்றோம்.

இன்றும்கூட இந்த நிகழ்வின் ஆரம்பத்திலேயே, பல கழுகுகள் எம்மை நோட்டம் விட்டபடி இருந்ததை நான் அவதானித்தேன். ஆனாலும், இங்கு நின்ற எமது மக்கள் ஒரு அடி கூடப்பின்வாங்காது, உணர்வு பூர்வமாக மாவீரர் தின நிகழ்வுகளில் ஈடுபட்டமை பெருமை கொள்ளக் கூடியது.

முன்னதாக இந்தநிகழ்வில் - பொதுசசுடரினை யாழ்.மாவட்ட நிர்வாகசேவை பொறுப்பாளர் விஜிதரன், யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனகசபாபதி, கூட்டுறவு உதவி ஆணையாளர்கள் மற்றும் மா.க.ஈழவேந்தன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

மாவீரர் லெப்.கேணல் தூயவனின் தந்தையார் - மாவீரர்களின் பொதுப்படத்திற்கு ஈகச்சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார். விசேடமாக அமைக்கப்பட்டிருந்த பந்தலில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த மாவீரர்களான தியாகி லெப். கேணல் திலீபன், 2 ஆம் லெப். மாலதி ஆகியோரின் உருவப்படங்களுக்கும் மலர் மாலை அணிவித்து ஈகச்சுடர் ஏற்றப்பட்டது.

இந்த நிகழ்வில், யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிபேரவை செயலாளர் சொலமன் சு சிறில் உட்பட பலரும் சிறப்புரையாற்றினர். கூட்டுறவுத் துறை சார்ந்த ஊழியர்கள் பலர் இந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். (ச)

# மூன்று பிள்ளைகள் கொலை தொடர்பாக மேலும் இருவர் பொலிஸாரால் கைது

தந்தை ஒருவர் தனது மூன்று பிள்ளைகளைக் கிணற்றுக்குள் தள்ளிக் கொலை செய்ததுடன், தானும் கிணற்றுக்குள் குதித்து தற்கொலை செய்துகொள்ள முயன்ற சம்பவம் தொடர்பாக, தற்கொலை செய்ய முயன்றவரின் மனைவியும் மற்றும் ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காரைநகர் - களபூமி என்னும் இடத்தில் கடந்த திங்கட்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது தெரிந்ததே.

ஊர்காவற்றுறை பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டவர் கொடுத்த முறைப்பாட்டையடுத்தே, இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர் தனது முறைப்பாட்டில்- தனது மனைவி, வேறு ஒரு ஆணுடன் கொண்டிருந்த தொடர்பை அறிந்தபோது, ஏற்பட்ட ஆத்திரத்திலேயே அவ்வாறு தற்கொலை முயற்சியில் ஈடுபட்டதாகத் தெரிவித்தார்.

## கலந்துரையாடல்

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம அபிவிருத்தி சம்பந்தமான தேவைகளை இனங்காணல், திட்டம் தயாரித்தல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் கிராம அபிவிருத்திச்சங்கத்தினரைக் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (44)

# அஞ்சல் அறிமுக அட்டைகள் தபாலங்களுக்கு அனுப்பிவைப்பு

## பிராந்திய அதிகாரி எஸ்.சிவரஜசிங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிலுள்ள தபாலகங்களூடாக, அஞ்சல் அறிமுக அட்டையைப் பெறுவதற்காக விண்ணப்பித்தவர்களுடைய அஞ்சல் அறிமுக அட்டைகள் - அந்தந்தத் தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக, பிராந்திய நிர்வாக அதிகாரி எஸ். சிவராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சை நெருங்கிக்கொண்டிருப்பதால், கடந்த சில தினங்களாக பெருமளவு மாணவர்கள் அஞ்சல அறிமுக அட்டையைப் பெறுவதற்காக, தபால் நிலையங்கள் மற்றும் பிராந்திய அலுவலகங்களுக்கு அலைந்து வருகின்றனர்.

அஞ்சல் அறிமுக அட்டைக்கு விண்ணப்பித்தவர்கள் - தபால் நிலையங்களுக்கோ, பிராந்திய நிலையங்களுக்கோ அலைய வேண்டாம். நேற்றுவரை விண்ணபபித்தவர்களுடைய அஞ்சல் அட்டைகள் விண்ணபபித்த தபால் நிலையங்களில், எதிர்வரும் திங்கடகிழமை முதல் பெற்றுக்கொள்ளலாம்.

இதுவரை விண்ணப்பங்களை அனுப்பாதவர்கள், விரைவாக அனுப்பிவைக்குமாறும், அவை பரீட்சைத் திகதிக்கு முன்னர் அனுப்பப்பட்ட தபால் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும், பிராந்திய நிர்வாக அதிகாரி எஸ். சிவராஜசிங்கம் தெரிவித்தார்.

# கவிதைப்போட்டியும் புத்தக உருவாக்கமும்

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு நடாத்தப்படவுள்ள கவிதைப் போட்டியில், தெரிவாகும் சிறப்புக்கவிதைகளை புத்தகமாக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதென, யாழ். மனித உரிமைகள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்துக்கு, எதிர்வரும் மூன்றாம் திகதிக்கு முன் போட்டியாளர்களால் அனுபபிவைக்கப்படும் மனிதஉரிமை சம்மந்தமான கவிதைகளே, இவ்வாறு புத்தகமாக வெளியிடப்படவுள்ளன.

இந்தக் கவிதைகள் - பெண்கள் உரிமைகள், மனித உரிமைகள் அவசியம், சிறுவர் உரிமைகள், இடம்பெயர்ந்தோர் அவலங்கள் முதலான ஏதேனும் ஒரு பொருளை மையமாகக் கொண்டு அமையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தப் போட்டியில் வயதெல்லையின்றி எவரும் பங்குபற்றமுடியும். இக்கவிதைப் போட்டியில பங்குபற்றி வெற்றிபெறுவோருக்கு, பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக யாழ். மனித உரிமைகள் அலுவலகம் அறிவித்துள்ளது.

கவிதைகளை இல. 20 சோமசுந்தரம் அவனியூ, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேடடுக்கொள்ளப்பட்டுள்ளது. (ப)




# படையினர் பாவனையிலிருந்த கட்டடங்கள் பிரதேசசபையின் அதிகாரம் பெற்றவை

வடமராட்சி கிழக்குப் பகுதியிலுள்ள - அம்பன் மத்திய மகப்பேற்று நிலைய வைத்தியசாலைக் கட்டடம் மற்றும் பருத்தித்துறை பிரதேசசபையின் பொது நூலகத்தின் உப அலுவலகக் கட்டடம், என்பன படையினரால் மீளக்கையளித்தபோதும்? அப்பகுதிகளில் மக்களை மீளக் குடியமர படையினர் தொடர்ந்தும் மறுத்து வருகின்றனர்.

2000 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கை மூலம் கைப்பற்றப்பட்டு, உயர் பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்ட இப்பகுதிகள் - நேற்று முன்தினம் படையினரால் மீளக் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில், வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி ரி.திருட்செல்வம், பருத்தித்துறை பிரதேச செயலர் சி.நடராசா, வடமராட்சி கிழக்கு - மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.வேலாயுதபிள்ளை மற்றும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் எம் .இரவிச்சந்திரன், உட்படப்பலர் கலந்துகொண்டனர்.

படைத்தரப்பில், பலாலிப் படைத்தளத்தலைமை அலுவலகத்தைச் சேர்ந்த - கேணல் சில்வாவும், நாகர்கோயில் படைமுகாம் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

எனினும், இராணுவத்தினர் தற்போது இப்பகுதிகளில் உள்ள தனியார் கட்டடங்களில்முகாம்களை அமைத்துத்தங்கியுள்ளனர் என்பதால் இப்பகுதிக்குள் மக்கள் குடியமர மறுத்து வருகின்றனர்.

இப்பகுதியினுள் அமைந்துள்ள கட்டடங்களின் பணிகள் -மீள ஆரம்பிக்கப்பட்டாலும், மக்கள் சுமுகமாக வந்து செல்வதற்கும் மீளக்குடியமர்வதற்குமான, சூழல் ஏற்படுத்தித்தரா விட்டால் இவற்றை மீள இயக்குவதிலோ, விடுவிக்கப்பட்டதிலோ அர்த்தமில்லையென அப்பகுதி மக்கள் விசனமடைந்துள்ளனர். (202)

## பொது அறிவுப் போட்டி பரிசளிப்பு விழா

மக்கள் வங்கியினால் நடாத்தப்பட்ட 'சொல்வோம் வெல்வோம்' சிசு உதானப் பொது அறிவுப்போட்டி சான்றிதழ்கள், பரிசில்கள் வழங்கும் வைபவம் - இம்மாதம் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டி - குடாநாடு முழுவதும் நடத்தப்பட்டபோதும், இறுதிப் போட்டிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் தகுதி பெற்றுள்ளன.

பரிசளிப்பு வைபவத்துக்கு மக்கள் வங்கியின் யாழ்ப்பாணம், வன்னி உதவிப் பொதுமுகாமையாளர், மு.க.சிவபாதவிருதயர் தலைமை தாங்குவார். பிரதம விருந்தினர்களாக, வடபுல மக்கள் வங்கி நிறைவேற்று அதிகாரி சி.இளம்பிறைநாதன், யாழ்ப்பாணக் கல்வி வலயப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு நேற்றுமுதல் ஆரம்பம்

மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வுகள் - தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் நேற்று முதல் நடைபெற்று வருகின்றன. சனசமூக நிலையங்கள், பொது அமைபபுக்கள், கூட்டுறவுச்சங்கங்கள், தேசிய எழுச்சிப் பேரவையினர் ஆகியோரது ஏற்பாட்டில் இவ்மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு நிகழ்வுகள் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நேற்றைய தினம் கரவெட்டியின் கரணவாய்ப் பகுதியில், 27 மாவீரர்களின் பெற்றோரைக் கௌரவிக்கும் நிகழ்வு - கரணவாய் பொன்னம்பலம் அ.த.க பாடசாலையில் பிற்பகல் நடைபெற்றது. கரவெட்டிப்பிரதேச தேசிய எழுச்சிப்பேரவைச்செயலாள் தலைமையில் நிகழ்வுகள் தொடங்கியது. யாழ்மாவட்ட அரசியல் மகளிர் துறைப்பொறுப்பாளர் செல்வி கலைவிழி பொதுச்சுடரினை ஏற்றி நிகழ்வை தொடக்கிவைத்தார்.

மாவீரர்களின் பெற்றோருக்கு சிற்றுண்டிகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# போரூட்நிறுவன செயற்பாடுகளை பிரதேச செயலர் விளக்கியுள்ளார்

(நெல்லியடி)

போரூட் நிறுவனத்தால், செயற்படுத்தப்படவிருக்கும் திட்டங்கள் அனைத்துக்குமான நடைமுறைகள் பற்றிக் கரவெட்டி பிரதேசசெயலர் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் விளக்கியுள்ளார்.

இத்தகைய திட்டங்கள் யாவும், முதலில் ஒருங்கிணைப்புக்குழுவால் அங்கிகரிக்கப்படவேண்டும். அதன்பின்பே, அவை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்படும். எந்தவொரு அரச சார்பற்ற நிறுவனத்தின் செயற்திட்டங்களாக இருந்தாலும், அத்திட்டங்கள்மூலம் பயன்பெறும் பயனாளிகள் விபரம் - கிராம அலுவலர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் நல்லிணக்கக் குழுவுறுப்பினர்கள் ஆகியோரின் கையொப்பங்களுடன் சமர்ப்பிக்கப்பட்டாலேயே அவை தன்னால் சிபாரிசு செய்யப்படுமெனக் கூறிய பிரதேச செயலர் - இதற்கமைவாகவே வருங்காலத்தில் செயற்படுத்தப்படும் திட்டங்களை சம்மந்தப்பட்டோர் செய்வார்கள் எனவும் தெரிவித்தார். (13)

# தொட்டால் சுரும் கவணம்

யாழ்ப்பாண கிரிக்கெட் ரசிகர்கள் கிரிக்கெட்டின்மீது நிரம்ப ஆர்வம் கொண்டவர்கள். இந்தவகையில், கிரிக்கெட் ஆட்டம் பார்க்கக் கிடைக்கும் எந்தச் சந்தர்ப்பத்தையும் அவர்கள் விடுவதில்லை. இதனால்தானோ என்னவோ ஒலிஒளி அலைகள் எல்லை கடந்துவந்து, DD 1 ஆக ஆட்டங்களைத் தருகின்றன. சிறப்பாகத் தற்போது நடந்துமுடிந்த அவுஸ்திரேலிய, இந்திய, நியூசிலாந்து முக்கோணப் போட்டித் தொடரைத்தான் குறிப்பிடுகிறோம்.


புயல்

அதுவும் அவுஸ்திரேலியாவின் தகுதிக் குக்குறைவாக, சரியான ஓட்டங்களை இறுதிப்போட்டியில் எடுத்தும், அந்த எண்ணிக் கையைக்கூட எட்டவிடாமல் இந்தியாவைத் தோற்கடித்துக் கிண்ணம் வென்ற சந்தர்ப்பத்தையும் நினைத்துப் பார்க்கிறோம். அவுஸ் திரேலியாவின் இந்த மகத்துவத்துக்குக் காரணம் என்ன.

வெல்வதே அவர்களது பழக்கமாகிவிட்டது என்கிறார் ஒரு விமர்சகர். அதோடு வெல்வது அவுஸ்திரேலியக் கலாசாரம். அத்தோடு சர்வதேசத் தரம் வாய்ந்த வீரர்களும் அநேகம். அவர்கள் வாய்ப்பாக இல்லாத விடத்து, குறைநிரப்பு வீரர்களும் அதேநேரத்தில் அநேகம்.

மத்தியூ ஹேடன் ஒரு சந்தர்ப்பத்தில் அணியில் இடம்பிடிப்பதில் சந்தேகம் இருந்தது. ஆனால், அவரே கூறுவது - 'நான் இந்த நிலைக்கு வர பல வருடங்கள் கடினமாக உழைத்தேன்.' அவுஸ்திரேலிய அணியின் முன்னணி நிலைக்கு அதன் நீண்டகால வெற்றிச்சுவை ஒரு காரணம். மற்றயது நாட்டில் கிடைக்கும் திறமை நிறைந்த இளந்தலைமுறை.

ரிக்கிபொன்ரிங் கருத்துக்கூறுகையில், ஒரு முதன்மை அணி உருவாகப் பல விடயங்கள் ஒன்று சேர்ந்து அமையவேண்டும் என்கிறார். எமது உள்ளூர் கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள் மிகுந்த உயர்தரம் வாய்ந்தவை.




எமது துடுப்பாட்ட வரிசையை அவதானித்தால் தெரியும். உலகின் அதிசிறந்த பத்துப்பேரில் நான்கைந்து பேர் அவர்களாக இருப்பார்கள். இதேபோன்றதுதான் எமது பந்துவீச்சுக் குழுவும். வெல்வதை ஒரு பழக்கமாக்கிக்கொள்வது என்பது அவுஸ்திரேலிய அணியின் பாணி என்றே நான் நினைக்கின்றேன் என்கிறார் பொன்ரிங்.


சூறாவளி

அடுத்தது இசைவாக்கம், காலநிலை, மைதானங்கள், வேகமான தடம், வேகம் குறைந்த தடம் எதுவாக இருந்தாலும் நாங்கள் விரைவாக இசைவாக்கம் பெற்றுவிடுகின்றோம். என்னைப் பொறுத்தவரையில் சர்வதேசரீதியில் வெற்றிகளைக் குவிக்க இது ஒரு முக்கிய காரணம் என்று நம்புகிறேன் என்கிறார் பொன்ரிங். அதுமட்டுமல்ல, தலைமைத்துவம் - பொன்ரிங் தலைமைத்துவம் பற்றி மிக உணர்வுடன் பேசுகிறார். அணியின் பயிற்றுநர் - புக்காளன் கருத்துக்கூறும்போது, மிகச்சிறந்த தலைமையை அணி கொண்டுள்ளது. அதோடு திறமை மிகுந்த வீரர்கள் நிறைய இருக்கிறார்கள். நாளைய தினத்தைப்பற்றி இன்றே சிந்திக்கிறோம். அதனால், கட்டுக்கோப்புக்குள் எல்லாம் இருக்கிறது என்கிறார் புக்காளன்.

இப்பொழுது முக்கியமானதொரு விடயம் பற்றி புக்காளன் பேசுகிறார். பிரட்வில்லியம்ஸ், இயன்ஹார்கி, நேதன் பிரக்கன் போன்றவர்களைப் பாருங்கள், அவர்கள் தங்கள் முன்னோடிகளுக்கு முன்னால் எப்படிச் செல்வது என்று சிந்திக்கிறார்கள். இவர்கள் வித்தியாசமான அணுகுமுறை கொண்டவர்கள், ஆனால், ஒரே இலக்குக்கொண்டவர்கள், எல்லோரும் தனித்துவமான பலங்கள் கொண்டவர்கள், அவை எல்லாம் ஒன்றிணையும்போது, வெற்றி தானாகவே தேடிவருகின்றது என்கிறார்.

முக்கோணத் தொடரில் இரண்டு வேகப்பந்துவீச்சாளர்கள் ரசிகர்களின் மனதில் கூடுதலாகப் பதிந்திருப்பார்கள். ஒருவர் பிரட்வில்லியம்ஸ். மற்றவர் நேதன் பிரக்கன். வில்லியம்ஸ் கூறுகிறார் - 'நான் **Line and Length** பிழைக்காமல் பந்து வீசுகிறேன். எனக்கு இலக்கு விக்கெட் சாய்ப்பது, இதனைக் கூறுவது இலகு. செயலில் காட்டுவது கடினம். எனவே, நான் கடினமான பயிற்சிகளை மேற்கொள்கிறேன். அவுஸ்திரேலிய வெற்றி என்பது அபாரமானது. அவுஸ்திரேலியாவிற்காக விளையாடுவது மிகவும் பெருமைக்குரியது'.

பிரக்கன் கூறுகிறார் - 'விக்கெட்டுக்களைச் சாய்ப்பதற்குச் சாதகமான தடங்கள், எப்போதும் கிடைக்கும் என்று நான் நம்புவதில்லை. இந்தியத் தடங்கள் எனக்கு உளரீதியான தைரியத்தைத் தந்தன. இரண்டு வகைக் கிரிக்கெட்டிலும் செய்யவேண்டியது விக்கெட்டுகள் சாய்ப்பதுதான். நான் மைதானத்தில் இறங்கும்போது, விக்கெட் சாய்க்கவேண்டும் என்ற ஒரே சிந்தனையுடன் இறங்குகிறேன் என்கிறார்.

இறுதியாக புக்கானன் கூறுகிறார் - யார் சிறந்த பயிற்றுநராக இருக்கிறாரோ, அவர் சிறந்த கிரிக்கெட் வீரராகவும் அமையமுடியும். அவனாலேயே சிறந்த முடிவுகள் எடுக்க முடியும். நாம் விளையாட்டை ரசிக்கவேண்டும். எமது கடமை - வீரர்களை முதன்மைப்படுத்தி முன்னேவிட்டு, புதிய உயர்தரங்களை உருவாக்குவதுதான்.

அவுஸ்திரேலிய அணியை இன்னும் நீண்டகாலம் முதன்மை நிலையில் இருந்து சாய்க்க முடியாதென்பதை மக்ரா, லீ, ஜிலெஸ்பி மற்றும் ஷேன்வோனும் இல்லாத நிலையிலும், இளம்புயல்கள் பிரக்கன் வில்லியம்ஸ், இயன் ஹார்வி போன்றோரை வைத்து கிண்ணம் வெல்லும் திறமையை வைத்து நிர்ணயிக்க முடிகிறது.

- சிந்தியா

# நடக்கும் என்று நம்புவோம்

இந்தச் செய்தி சந்தேகமாக இருக்கிறது. ஏனெனில், இதுவும் ஒரு வகையில் இந்திய-பாகிஸ்தான் கிரிக்கெட் தொடர்புடையதுதான். ஆனால், இங்கு இன்னொரு விஷேடம் கிரிக்கெட் உலகின் மகத்தான மனப்பாங்குதான். சிறிநாத் ஓய்வுபெற்றதுடன் இந்தியாவின் வேகப்பந்தின் ஒருமகத்தான சக்தி மறைந்துவிட்டதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள். சாகிர்கானோ, நெஹ்ராவோ, ஏன் அகர்காரோ கூட சிறிநாத்துக்கு ஈடல்ல. இந்த நிலையில் இப்போதுதான் மக்ரா, ஜிலெஸ்பி, பிரெட்லி இல்லாத அவுஸ்திரேலிய அணியிடம், ஒருநாள் முக்கோணத்தொடரில் இரண்டாம் நிலைவேகப்பந்து வீச்சாளர்களிடம் வாங்கிக்கட்டிக்கொண்டிருக்கிறார்கள் இந்திய அணியினர். உண்மையைக் கூறப்போனால் களத்தடுப்பில், துடுப்பாட்டத்தில், சுழற்பந்துவீச்சில் இந்திய அணி குறைந்ததல்ல. ஆனால், வேகப்பந்துவீச்சு என்று வரும்போது, சுமார்தான். எனவே இந்தியாவிற்கு அவசரமாகத் தேவைப்படுவது ஒரு கபில் தேவ், ஒரு சிறிநாத் போன்றவர்கள்தான்.


நல்ல பொருத்தம்

இந்த வகையில்தான் இந்தியாவில் இளம் வேகப்பந்துவீச்சாளர்களை உருவாக்க BCCI இந்திய அணித்தலைவர் கங்கூலியிடமும், பயிற்றுநர் ஜோன்ரைட்டிடமும் ஒரு சமாசாரத்தைக் காதில போட்டுள்ளார்கள். அவுஸ்திரேலிய சுற்றுப்பயணமும் அண்மிக்கிறது. இந்த நிலையில், பாகிஸ்தான் வேகப்பந்துவீச்சாளர் வஸீம் அக்ரமை, நமது வீரர்களுக்கு வேகப்பந்து வீச்சில் பயிற்சியளிக்க அழைப்போமா என்பதே அது. அவுஸ்திரேலிய சுற்றுப்பயணத்தை அண்டி, இந்திய வேகப்பந்துவீச்சுத் தொடரில் அக்ரத்தை ஒரு **CONSULTANT** ஆக இணைத்துக்கொள்ள முயல்வதாக **BCCI** கூறியுள்ளது. இது தொடர்பில்- தற்போது இந்தியா வந்திருக்கும் வஸீம் அக்ரத்தை இந்திய கிரிக்கெட்சபைத்தலைவர் ஜக்மோகன்டால்மியா சந்திக்கும்போது, ஒரு முடிவு எட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இது விடயத்தில் காங்கூலியிடம் கருத்துக் கேட்டபோது, ஏன் அக்ரம் இந்தியாவுக்குத் தேவை? ஏனென்றால், நவீனகாலத்தில் அதியற்புத வேகப் பந்துவீச்சாளர் அக்ரம்தான் என்று மிகப்பொருத்தமாகப் புகழாரம் சூட்டியுள்ளார். இந்திய - அவுஸ்திரேலிய நான்கு டெஸ்ட் போட்டித்தொடர், அவுஸ்திரேலியாவில் நடைபெறும்போது **ESPN-STAT SPORTS** கிரிக்கெட் வர்ணனையாளராக அக்ரமும் அவுஸ்திரேலியாவிலிருப்பார். அந்தவேளையில் இந்திய இடதுகைப் பந்து வீச்சாளர்களான சாகீர்கான், ஆஸிஸ் நெஹ்றா, புதுமுகம் இர்பான் பதான் ஆகியோரை அக்ரம் அவதானிக்கவேண்டும் என்று இந்திய கிரிக்கெட்சபை விரும்புகிறது.

தற்போது 37 வயதாகும் வஸீம் அக்ரம் கடந்த மேமாதத்தில் சர்வதேச கிரிக்கெட் உலகில் இருந்து ஓய்வுபெற்றார். இவர் டெஸ்ட் போட்டிகளில் 414 விக்கெட்டுக்களையும், ஒருநாள் போட்டிகளில் உலகசாதனையாக 502 விக்கெட்டுக்களையும் சாய்த்திருப்பவர். இதற்கு மேல் அக்ரம் இந்திய வேகப்பந்துவீச்சாளர்களைப் புடம் இடவும், உருவாக்கவும் தகுதியானவரா என்று யாவரும் கேள்வியெழுப்பினால் அது அப்பட்டமான பைத்தியக் காரத்தனமாகத்தான் இருக்கும். இனனொரு வகையில் உபகண்ட நாடுகளில் உறவுகள் வேகமாகச் சீராக கிரிக்கெட் உதவப்போகின்றது என்பது அடுத்தது. எத்தனையோ வேகப்பந்துவீச்சாளர்கள் இருக்க வஸம் அக்ரத்தை இந்தியக் கிரிக்கெட்சபை முன்னிலைப்படுத்தியது விசேடமாக எமது அயலவர்களையே நாம் அங்கீகரிக்கத்தொடங்கும், ஆசிய சகோதரத்துவம் உருவாகியிருப்பது எல்லாம் நன்மையாகவே முடியட்டும்.

ஜோசப் கிருஸ்ணா

# மின்னல் அடித்தது

இலங்கை கிரிக்கெட் அணியின் புதிய பயிற்றுநர் ஜோண் டைசன் மிகுந்த மகிழ்சியான மனிதராக இருப்பார். அவர் இலங்கை அணியின் பயிற்றுநராகியதன் பின், முதன்முதலாக இலங்கை அணி சர்வதேசப் போட்டியொன்றில் கலந்து கொண்டது, இங்கிலாந்துடனான முதலாவது இருநாள் போட்டியிலாகும். இந்தப் போட்டி தம்புள்ள- ரண்கிரி மைதானத்தில் புதிதாக அமைக்கப்பட்ட ஒளிவெள்ளத்தில் இரவு பகல் ஆட்டமாக நடைபெற்றது. ஆட்டம் இங்கிலாந்துக்கு இருளாகிவிட்டது. இங்கிலாந்து இப்படியொரு படுதோல்வியை எதிர்பார்த்திருக்கவேமாட்டாது. 46-1 ஒவர்களில் இங்கிலாந்தை 88 ஓட்டங்களுக்குச் சுருட்டித் தள்ளிய இலங்கை அணி, 13.5 ஒவர்களில் விக்கெட் இழப்பு எதுவும் இன்றி, பத்து விக்கெட் வித்தியாசத்தில் மகத்தான வெற்றியைக் கண்டது.


முதல்ப் பாய்ச்சல்

இந்த ஆட்டம் பற்றி அணித்தலைவர் மாவன் அத்தப்பத்து கருதுக் கூறுகையில், புதிய இளம் வேகப்பந்து வீச்சாளர் இருவர் பற்றி விதந்துரைத்துள்ளார். அவர்கள் டினூஷ பெர்னாண்டோ மற்றும் நுவன் குலசேகர இருவமே தமது முதலாவது ஆட்டத்திலேயே தலா இரண்டு விக்கெட்டுக்களைவீழ்த்தியுள்ளார்கள். இது அவர்களுக்கு நல்லதொரு ஆரம்பம்.

மக்டலின்-

| இங்கிலாந்தின் அதிகுறைந்த ஓட்ட எண்ணிக்கைகள் | | | | |
|---|---|---|---|---|
| 86 | - | எதிர் | அவுஸ்ரேலியா | 2001 |
| 88 | - | எதிர் | இலங்கை | 2003 |
| 89 | - | எதிர் | நியூசிலாந்து | 2002 |
| 93 | - | எதிர் | அவுஸ்திரேலியா | 1975 |
| 94 | - | எதிர் | அவுஸ்திரேலியா | 1979 |

இலங்கையில் நடைபெறவிருக்கும் மூன்று டெஸ்ட் போட்டித்தொடருக்கு, ஹசான் திலகரட்ண அணித்தலைவராக நியமிக்கப்பட்டபோது, பல்வேறு தரப்பில் இருந்தும் அதிருப்

# இலையுதிர் காலமல்ல

திக் குரல்கள் எழுந்தன. அவரது சர்வதேசக் கிரிக்கெட் காலம் முடிவடைகிறது. வயதும் முப்பத்தைந்து, இவரால் என்ன சாதிக்க முடியும் என்றவகையில், கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. என்றாலும் தற்போது அவரே அணித்தலைவர் என்றவகையில் அவரின் கருத்துக்களுக்கு முன்னுரிமை எப்போதும் உண்டு.


நிலைப்பேன் நான்

ஹசான் எதிர்வரும் டெஸ்ட் போட்டிகள் பற்றி நம்பிக்கையுடன் பேசினாலும், எச்சரிக்கை நிறைந்தவராகவே இருக்கின்றார். இவ்வருடம் ஏப்ரல் மாதத்தில் தலைமைப் பதவியை ஏற்ற ஹசான் இதுவரை தலைமைதாங்கியது நான்கு டெஸ்ட் போட்டிகளில் ஆகும். அவை நியூசிலாந்துடன் இரண்டு டெஸ்ட் போட்டிகள் மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணியுடன் இரண்டு டெஸ்ட் போட்டிகளாகும். இதில் நியூசிலாந்து இலங்கை ஆட்டங்கள் 0-0 என்ற வகையில் முடிவுற, இங்கிலாந்துடனான தொடர் 1-0 என்றவாறு இலங்கைக்குப் பாதகமாக அமைந்தது. இப்பொழுது இங்கிலாந்தை எதிர்கொள்ளும் ஹசானுக்கு இப்போட்டிகள் சோதனையாக அமையப்போவது மட்டுமல்லாமல், அவரது கிரிக்கெட் வாழ்க்கைக்கும் ஒரு பரீட்சையாக அமையக்கூடும்.

கடந்த நான்கு மாதங்களாக, சர்வதேச நிலையில் ஆட்டங்கள் எதிலும் பங்குகொள்ளாமல் இருந்த இலங்கை அணி, எவ்வாறு இங்கிலாந்தை எதிர்கொள்ளப் போகிறது என்று அவரிடம் வினவப்பட்டது. அதற்கு அவர் ஓய்வென்று இருந்தது ஒருமாதம் மட்டுமே, அதன்பின் புதிய பயிற்றுனர் ஜோண் டைசன் வந்துவிட்டார், மிகுதிக் காலம் அவர்தரும் பயிற்சியிலும் அதோடு முதல்தர ஆட்டங்களிலும் கழிந்தது. எனவே, இங்கிலாந்தை எதிர்கொள்வது அவ்வளவு கஸ்டமாக இராது என்கிறார். எது எவ்வாறாயினும் இங்கிலாந்துடனான இரண்டு டெஸ்ட் போட்டித்தொடர்களிலும், இலங்கை தோல்வியே கண்டிருந்தது. 2001 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற தொடரில் 2-1 என்றவாறும், 2002 இல் இங்கிலாந்தில் நடைபெற்ற தொடரில் 2-0 என்ற வகையிலும் தோல்வி கண்டிருந்தது. எனவே இந்த அபகீர்த்தியை இல்லாதொழிக்கும் பெரும் பொறுப்பு - ஹசானின் தலைமேல் விழுகிறது.

அவர் கூறுகிறார். நாங்கள் இறுதியாக இங்கிலாந்திடம் தோற்றமைக்கான காரணம் அவர்களின் திறமை என்பதைவிட, எமது பலவீனங்கள் என்பதே கூடிய பொருத்தமாக ,இருக்கும். 2002 இல் ஒரு டெஸ்ட் வென்றிருக்க முடியும். ஆனால், எமது துடுப்பாட்ட பலவீனமே அதற்குத் தடையாக இருந்தது என்றார்.

உண்மையில் 2001 - 2002 ஆண்டு இங்கிலாந்து சென்ற அணிவீரர்கள் என்றவகையில் பெருத்த வேறுபாடு எதுவும் இல்லை. ஆனால், ஒரேயொரு பாரிய வேறுபாடு தற்போது ஜோண் டைசன் புதிய பயிற்றுனராக வந்திருப்பது தான். அவர் ஒரு சிறந்த அனுபவம் வாய்ந்த பயிற்றுனர் என்பதை சிறிது காலத்துக்குள்ளேயே அறிந்து கொண்டேன். என்றாலும், அவரது அதிதிறமை தொடரின் மத்தியில் எங்களை வழிநடத்திச் செல்வதிலேயே வெளிப்படும் என்று நான் நம்புகிறேன் என்றார்.

பொதுவாகத் தாயக மண்ணில் இலங்கை அணி விளையாடும்போது, இவர்களுக்குத் துருப்புச் சீட்டாக அமைவது சுழல் பந்துவீச்சாளர்கள்தான். ஆனால், இதனையே முதன்மையாகக் கொண்டு, இங்கிலாந்து சுழல் பந்துவீச்சை நன்கு வாலாயப்படுத்திக் கொண்டுள்ளார்கள். இதனை முரளியும் கூட ஒப்புக்கொண்டுள்ளார். எனவே, சுழல் பந்துவீச்சை மட்டும் நம்புவதும் அவ்வளவு சரியல்ல என்பதும் ஹசானின் கருத்தாக இருக்கிறது. எமது துடுப்பாட்ட வரிசை பலமானது. சனத், மாவன், குமார், சங்ககார மற்றும் களுவிதாரண போன்றவர்கள் இருக்கிறார்கள். ஆனால், எதிரணியில் தோர்ப், பிளிண்டோப் போன்றவர்கள்

# நண்பனே

நல்ல திறமையான நிலையில் இருப்பதை அச்சுறுத்துவதாகவே கொள்கிறார்கள். மேலும், வோன் நசார் உசேன், ரெயிஸ்கொதிக் என்ற வரிசையும் உன்னதமானது என்றார். ஆனால், ஒரு விடயத்தை மிகச்சரியாகவே ஹசான் கூறுகிறார். அதாவது, அலெக்ஸ் ரூவட் பற்றியது. அவர் சர்வதேச கிரிக்கெட் உலகில் இருந்து ஓய்வு பெற்றமை எமக்குப் பெரியதொரு ஆறுதல் என்கிறார்.

இப்போது ஒரு நாள் போட்டிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆனால், கணிப்புககு உரியதாக அமையப்போவது, டெஸ்ட் போட்டித் தொடரின் மூன்று ஆட்டங்களே. டெஸட் அணியின் தலைவர் என்றவகையில், ஹசானின் கருத்துக்கள் அனுபவம் நிறைந்த நிதானத்துடன் வெளிவந்திருப்பது அவதானிக்கப்படவேண்டியதாகும். இந்தவகையில் டெஸ்ட் தொடரை இலகுவில் தாரைவார்த்துக் கொடுத்துவிடும் ஒருவரல்ல இவர் என்பது மட்டும் தெளிவாகத் தெரிகின்றது.

-நிர்மலன்-

# துரோணர் பேசுகிறார்

நான்கு ஆண்டுகளுக்கு முன் நான் கண்ட இந்திய அணிபோல, இன்றைய இந்திய அணி இல்லை என்கிறார் - ஒருமாதகாலம் இந்தியாவில் தங்கியிருந்த அவுஸ்திரேலிய அணியின் பயிற்றுனர் புக்கானன்.

இந்திய வீரர்களிடம் போராட்டக்குணம் வளர்ந்துள்ளது. சவாலைச் சவாலாக ஏற்றுக்கொளளும் தன்மை காணப்படுகிறது. விடாப்பிடியாக வென்றே தீருவோம் என்கிற ஆக்ரோஷம் கொண்டவர்களாக அவர்கள் இருக்கிறார்கள் என்று வியந்து பாராட்டும் புக்கானன், இதற்கெல்லாம் காரணம் - இந்திய அணியின் தலைவர் செளரவ் கங்கூலிதான் என்றும் கூறியுள்ளார்.


நல்லவார்த்தைகள்

நான்கு வருடங்களுக்கு முன் மூன்று டெஸ்ட்போட்டிகளிலும், அவுஸ்திரேலியாவில் படுதோல்வி கண்டவர்கள் இந்தியர்கள். ஆனால், அந்த நிலைமை இன்றிருக்காது என்கிறார் புக்கானன்.

கங்கூலியின் தலைமையின்கீழ், தாயகத்துக்கு வெளியே விளையாடிய பத்தொன்பது டெஸ்ட் போட்டிகளில் இந்தியாவால் வெல்ல முடிந்தது என்னவோ ஐந்தே ஐந்து போட்டிகளில்தான். இருந்தாலும், சச்சினின் தலைமையின்பின் அணியை நிமிர்த்தியவர் செளரவ் கங்கூலிதான். அவருக்கு வாய்ப்பாக நியூசிலாந்து நாட்டின் ஜோண்ரைட்டும் பயிற்றுநராக இந்தியாவுக்கு வாய்த்தார்.

இந்த இணைப்புக்கு ஒரு உதாரணமாக 2002 இல் இங்கிலாந்துக்கு இந்தியா சென்றிருந்தவேளை, நான்கு டெஸ்ட் போட்டிகளையும் ஒன்றுக்கு ஒன்று என்று சமப்படுத்திய இந்தியா, நான்காவது டெஸ்டில் 325 ஓட்டங்கள் எனும் இலக்கைத் தாண்டி, வெற்றிபெற்றதை கங்கூலியின் சாதனையாகவே விமர்சகர்கள் கருதுகிறார்கள்.

இன்னொருபுறம் இந்தியப் பந்து வீச்சாளர்கள் சாகீர்கான், ஆஷிஷ் நெஹ்ரா, அஜித் அகர்கார்,அவிஸ்கா சால்வி ஆகியோரையும் முன்னேற்றகரமான, இன்னும் முன்னேறும் ஆற்றல் நிறைந்த வீரர்களாகவே புக்கானன் இனங்காண்கிறார்.

இறுதியாக புக்கானன் தம்மைப் பற்றியும் அழகாகக் கூறுகிறார். இன்னும் ஒருவருடத்தில் மீண்டும் டெஸ்ட் தொடர் ஒன்றுக்காக இந்தியா வரவுள்ளோம். அது தொடர்பில் இந்தியாவின் காலநிலை, பாரம்பரியம், மைதானங்களின் தன்மை போன்றவற்றையும் இந்த ஒருமாதத்தில் நன்கு ஊடுருவி அறிந்துகொண்டோம் என்கிறார் புக்கானன்.

உண்மை கங்கூலியைப் பாராட்டும் தகுதி புக்கானனுக்கு உண்டு. புக்கானனால் வாழ்த்தப்படும் தகுதியும் கங்கூலிக்கு உண்டு.

- காயத்ரி

# பழைய வாத்தியார்

கிறைவ் லொயிட் - மேற்கிந்தியத்தீவுகளின் புகழ்பூத்த அணித்தலைவர், அதுமட்டுமல்ல ஒரு உயர்ஸ்தானிகர் மட்டத்தில் வைத்தே கணிக்கப்பட்டவர். இப்பொழுதும் அவரது பணி ஆட்ட மத்தியஸ்தர். ஆனால், இந்த ஆட்ட மத்தியஸ்தர்களே அந்தக் காலத்து வாத்திமார் போலத்தான் இருக்கிறார்கள். விஷய ஞானமும் அப்படி தகுதிகள், திறமைகளும் அப்படி.


வைஸ்ரோய்

கடும்பிடியும் அப்படி கொஞ்சம் பிழைவிட்டால் சாத்தல்தான். (இந்தக் காலத்தில் எல்லாம் மட்டுமட்டுத்தான் என்கிறார் ஒரு இளமட்டம்) இந்தப் பழைய வாத்தியார் பாணியைத்தான் மைக்புரொக்கரும பின்பற்றினார். இப்போது கிளைவ்லொயிடும் சொல்கின்றார். பிறழ்வான எந்த நடவடிக்கையிலும் நான் மிகக்கடுமையாகவே இருப்பேன் என்று, இங்கிலாந்து - இலங்கை அணிகளுக்குக் கடும் எச்சரிக்கை செய்திருக்கிறார் கிறைவ் லொயிட். அணித்தலைவர்கள் மற்றும் பயிற்றுனர்களை அழைத்து மைதானத்தில் மிகவும் ஒழுக்கக்கட்டுப்பாடுகளை எதிர்பார்க்கிறேன். சின்னத்தனமான நடத்தைகள் எதையும் சகித்துக்கொள்ளமாட்டேன் என்று எச்சரித்துள்ளார். இரண்டு வருடங்களின் முன் இதே அணிகள் சந்தித்தபோது, வார்த்தையாடல்கள் அதீதமாகி, ஆறு வீரர்கள் கடுமையாக எச்சரிக்கவும் பட்டார்கள். இந்தச் செய்தியை மறைமுகமாக லொயிட் ஞாபகப்படுத்துகிறார் போலத் தெரிகின்றுது. உன்னதமான கிரிக்கெட் விளையாட்டின் பாதுகாவலர்களே கிரிக்கெட் வீரர்கள்தான். அதன் பெருமையைக்காக்கும் பொறுப்பு, வீரர்களுக்கு உண்டு என்கிறார் அவர்.

அண்மையில் முடிவடைந்த தென்னாபிரிக்க - பாகிஸ்தான் டெஸ்ட் தொடரில் லொயிடால் தண்டிக்கப்பட்டவர்கள் அக்தார், தென்ஆபிரிக்க அணித்தலைவர் கிரேம்ஸ்மித் மற்றும் அன்ட்ரூஹோல். இதேவேளை பங்களாதேஷ், கிங்கிலாந்து டெஸ்ட் தொடரின்போது, இங்கிலாந்தின் சகல துறை ஆட்டக்காரர் ரிக்கிகிளார்க். ஒரு சர்ச்சையில் அகப்பட்டும், தெய்வாதீனமாகத் தப்பிக் கொண்டார்.

ஆட்ட மத்தியஸ்தர்கள் கடும் போக்கைக் கையாள்வதை இன்றைய கிரிக்கெட் ரசிகர்கள் முற்றும் ஏற்றுக்கொள்ளவே செய்வார்கள். ஏனெனில், கிரிக்கெட் எனும் உன்னதமான ஆட்டத்துக்கு ஊறு செய்பவர்கள் எந்தத்தரப்பையும் விட, மைதானத்தில் நின்றாடும். கிரிக்கெட் வீரர்கள்தான் என்பதில் இருவேறு கருத்து இருக்கமுடியாது.

-சரண்யன்

அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்தில் இலங்கையில் நடைபெறவிருக்கிறது இன்னொரு முக்கோண ஒருநாள் கிரிக்கெட் சுற்றுபோட்டி. இந்தப் போட்டிகள் இலங்கையில் வெகு உற்சாகமாக, வேகமாக ஆதரவு பெற்று வளர்ந்து வருகின்றது. இது மகளிருக்கான

# மங்கையர் மஞ்சரி

ஒருநாள் போட்டிகள். இந்தத் தொடரில் பங்கு கொள்ளப்போகும் நாடுகள் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான். எந்தவகையிலும் முக்கியத்துவம் குறையாத விதத்தில் அமையப்போகும் இப்போட்டிகள் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் தம்மை பரிசோதனை செய்துகொள்ளும் ஒரு களமாகவே அமையப்போகின்றன. ஏனெனில், 2005 ஆம் ஆண்டில் நடைபெறப்போகும் உலகக்கிண்ண மகளிர் கிரிக்கெட் போட்டிகளுக்கு இவ்விரண்டு நாடுகளும் தகுதிபெற்றுள்ளன. உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளுக்கு பாகிஸ்தான் அணி தகுதி பெறாமல் போனது துரதிஸ்டமே.


எங்களின் காலம்

இது ஒருபுறம் இருக்க, இலங்கை அணியைத் தெரிவுசெய்ய 26 வீரர்களைத்தான் அழைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களிலிருந்து இறுதிப் பதினான்னு வீராங்கனைகள் தெரிவு செய்யப்படுவார்கள். இந்தத் தொடர் தொடர்பில் கருத்துத் தெரிவித்த இலங்கை மகளிர் கிரிக்கெட் சபைத்தலைவி கெவன் ஹேரத்- ஏழு ஒருநாள் ஆட்டங்கள் கொழும்பிலும், ஒரு ஆட்டம் கண்டியிலும் நடைபெற உத்தேசிக்கப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

ஏப்ரல் 17 இல் ஆரம்பமாகும் முதலாவது ஒருநாள் போட்டியுடன் - தொடரும் இத்தொடர் ஏப்ரல் 29 இல் நடைபெறும் இறுதி ஆட்டத்துடன் நிறைவுபெறும். இம்முறை இப்போட்டிகள் தொலைக் காட்சியூடாக நேரடியாக ஒளிபரப்புச் செய்யப்படவுள்ளமை ஒரு சிறப்புச் செய்தி.

- ரோஜா-

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*செறுவார்க்குச் சேண்இகவா இன்பம் அறிவுஇலா*
*அஞ்சும் பகைவர்ப் பெறின்.*

-திருக்குறள்.

## நமது நோக்கு

### தமிழ்மக்களின் உணர்வுகளும் படையினரின் செயற்பாடுகளும்!

ஒரு நாட்டின் கலாசாரம் என்பது, அந்த நாட்டின் மக்களால் பெருமையுடன் பேணிப் பாதுகாக்கப்படும் ஒன்றாகும், கலாசாரமற்ற இனம் மந்த புத்தியுள்ள இனமாகும்.

ஒரு நாட்டின் அரச நாகரீகம் எப்படிப்பட்டதென்பதை அந்த நாட்டின் பாதுகாப்புப் படையினரின் பண்பாட்டையும் - இராணுவ கலாசாரத்தையும் கொண்டே இனங்காண முடியும்.

போரிடல், எதிரியை அழித்தல், நாட்டைப் பாதுகாத்தல் என்பது மட்டும் ஒரு நாட்டின் தேசியப் படையின் இலக்காக இருந்துவிடமுடியாது. அது அந்த நாட்டின் மக்களின் மத மற்றும் இன தனித்துவ கலாசார மேன்மையையும், பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களையும் பேணிப் பாதுகாக்கும் படையாகவும் இருக்கவேண்டியது அவசியமாகும்.

கலாசாரமற்ற படை, மந்த புத்தியுள்ள படையென்பது மறைந்த செஞ்சீனப் புரட்சித் தலைவரான மா சே துங்கின் இராணுவம் பற்றிய கருத்துக்களில் ஒன்றாகும்.

ஒரு நாட்டின் மக்களை, அவர்களின் மரபியல் கோட்பாடுகளை, பாரம்பரிய நிகழ்வுகளை, கலாசார விழுமியங்களை, பண்பாட்டுக் கோலங்களை - எந்தவொரு படையால் மதிக்கவோ, அங்கீகரித்து ஆதரிக்க முடியவில்லையோ, அந்தப் படை ஒரு தேசிய பாதுகாப்புப் படையாக எவராலும் மதித்து ஆதரிக்க முடியாது.

இரண்டாம் உலகப் போரின்போது, உலகினை முற்றாக விழுங்கி ஏப்பமிட்டு அனைத்தையும் தன்னுள் வாங்கும் நோக்குடன் - திசைதோறும், நாடுதோறும் படை நடத்திய ஹிட்லரின் இராணுவம், தான் ஆக்கிரமித்த இராணுவம் அனைத்தையும் துவம்சம் செய்து அந்தந்த நாட்டு மக்களின் பாரம்பரிய கலாசாரா மரபியல் கோலங்கள் அனைத்தையும் நிர்மூலம் செய்ததன் மூலம் தன்னையொரு இரத்த வெறி பிடித்த மனிதப் பண்பாட்டிற்கு முரணான கலாசாரமற்ற படையாகவே, இனங்காட்டிக் கொண்டர் என்பதை வரலாறு உணர்த்தியே நிற்கிறது.

ஒரு ஆக்கிரமிப்பு இராணுவம், ஒருபோதுமே மற்றொரு தேசிய இனத்தின் மாண்புகளை, அதாவது தன்னால் ஆக்கிரமிக்கப்பட்ட இனத்தின் தனித்துவ செயற்பாடுகளை - அங்கீகரித்து - மதித்து செயற்பட்டது கிடையாது.

அத்தகைய இராணுவம் தான் ஆக்கிரமித்த நாடுகளிலும், பிரதேசங்கிளிலும் ஒரு கூலிப்படையாகவே செயற்படும் தேசியப் படையாகவல்ல! அதன் நோக்கமும் இலக்கும் மனித உணர்வுகளை ஒருபோதுமே மதிப்பதில்லை.

பிரான்ஸினுள் நுழைந்த ஜேர்மனியப் படையும் அதையே செய்தது.

ஏன்? வியட்னாமில், கொரியாவில், ஆப்கானில், ஈராக்கில் நுழைந்த அமெரிக்கப் படையும் ஆஜன்ரீனாவில் நுழைந்த பிரிட்டிஷ் படையும், செச்சினியாவில் நுழைந்த ருஷ்யப் படையும், யூகோஸ்லாவியாவில் நுழைந்த நேட்டோப் படையும் இதனையே செய்தன.

அதனை நியாயப்படுத்தும் காரணங்களை உரத்துப் பிரசாரம் செய்ததன் மூலம் தமது செயல்களின் கொடூரங்களை மனித நேயத்திற்கும், கலாசாரத்திற்கும் முரணான நடவடிக்கைகளை மூடிமறைக்க முயன்றன. அந்த நாடுகளின் மேலாதிக்க வெறியும் வலுவும், வலுவற்ற நாடுகளை எதிர்க்குரல் எழுப்பாது தடுத்ததே தவிர அவர்களின் செயல்களுக்கு 'ஆமாம் சாமி' போடவைக்க அவைகளால் முடியவில்லை.

மனித குலத்திற்கும், தேசிய இனங்களின் தனித்துவத்திற்கும் எதிராக வல்லாதிக்க சக்திகளின் அதிகாரவெறியும், ஆக்கிரமிப்பும் படைகளின் மந்த புத்தி கலாசார செயற்பாடுகளும் ஒருபோதுமே பூரணமான வெற்றியை அடைந்ததாக வரலாறே கிடையாது.

அது எப்போதுமே நீறுபூத்த நெருப்பாக கனன்று கொண்டிருக்கும். எதிர்ப்புணர்வினை நிரந்தரமாகவே கொண்டிருக்கும். உறங்கும் எரிமலையைப் போன்று குமுறக் காத்திருக்கும். அந்த எதிர்ப்புணர்வு - வல்லாதிக்க சக்திகளின், படைகளின் மீது குறிவைத்துத் தாக்கியே தீரும் என்பது வரலாறு உணர்த்தி நிற்கும் பாடமுமாகும்.

கடந்த சில தினங்களாக மாவீரர் நாளை உணர்வெழுச்சியுடன் நினைவுகூர தமிழ் மக்கள் மேற்கொண்டு வரும் செயற்பாடுகளுக்கு எதிராக சிறிலங்கா படைத்தரப்பில் ஒரு பகுதியினர் கொண்டுவரும் நடவடிக்கைகள் தமிழ் மக்களின் உணர்வுகளை அவமதித்து உரிமைகளை நிராகரிக்கும் கலாசாரமற்ற தன்மைகளின் வெளிப்பாடாகவே உணரமுடிகிறது.

மாவீரர் நாள் நிகழ்வு ஏற்பாடுகள் அரசுக்கோ, படையினருக்கோ எதிரான யுத்த நடவடிக்கைகளோ, சமாதானத்திற்கு எதிரான அமைதிக்கு குந்தகம் ஏற்படுத்தும் செயற்பாடுகளோ அல்ல.

மாறாக, மண்ணிற்காக மக்களிற்காக மரணித்த மனிதர்களை? ஆத்மார்த்தமாக நினைவு கூர்ந்து அவர்களை நெஞ்சிலேற்றி பூஜிக்கும் பண்பாட்டு நிகழ்வேயாகும். அது மட்டுமல்ல, இந்த நிகழ்வு தமிழ் மக்களின் ஆத்மார்த்த உணர்வுகளுடன் ஒன்றிவிட்ட ஒன்றுமாகும்.

இதனைத் தடுப்பதோ, இதில் தலையீடு செய்து குழப்பங்களை ஏற்படுத்த முயல்வதோ - தமிழ் மக்களை, அவர்களின் உரிமைகளை அவமதிக்கும் செயலாகவே கருதப்படும். அது சமாதான நகர்வுகளையும் பெரிதும் பாதிக்கச் செய்யும் என்பதுடன் அது குறித்த தமிழ் மக்களின் நம்பிக்கையையும் கேள்விக்குறியாக்கிவிடும்.

இதனை - அரச அதிகாரத் தரப்பினரும், அவர்களின் கட்டளைகளுக்குக் கீழ் இயங்கும் பாதுகாப்புப் படையினரும் புரிந்துகொள்ளுதல் வேண்டும்.

## நாடும் நடப்பும்




# மாவீரர்தின ஏற்பாடுகளை குழப்பும் படையினரின் செயற்பாடுகள் சந்தேகங்களைத் தருகிறது!

## மாவீரர் எழுச்சி நாள் ஏற்பாட்டுக்குழு கண்டனம்

தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் உண்மைத்தன்மையை ஏற்று, இன்று சர்வதேச உலகும், அரசும் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதியாகிய தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப்பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் இவ்வேளையில், அரச படையினரால் தமிழீழ பிரதேசமெங்கும் பெருமெடுப்பில் கொண்டாட ஏற்பாடாகி வரும் மாவீரர்தின நிகழ்வுகளைக் குழப்புவதற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிப்பதாக யாழ்.மாவட்ட மாவீரர் நாள் ஏற்பாட்டுக்குழு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வகையில் மேலும் இத்தகைய செயற்பாடுகள் மூலம் அரசியல் பேச்சுவார்த்தைகளில் அரசாங்கம் கொண்டிருக்கும் நிலைப்பாடு தொடர்பாக, தமிழீழ மக்களாகிய நாம் சந்தேகம் கொள்ளவேண்டியுள்ளது. ஒருபுறம் சமாதானம் எனவும், மறுபுறம் அரச படையினரை ஏவிவிட்டு தமிழ் மக்களின் தேசிய எழுச்சி நாளை குழப்பும் செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருப்பது, அவர்களின் சமாதானம் தொடர்பாக கபடத்தனமான செயற்பாட்டைக் காட்டிநிற்கின்றது.

1995 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கை மூலம் எமது யாழ்.பிரதேசத்தைக் கைப்பற்றிய இராணுவம், எமது மண்ணுக்காக மக்களின் வாழ்வுக்காக தம்முயிரை ஈகஞ்செய்து உறங்கிக்கொண்டிருக்கும், அந்த மாவீரர்களின் கல்லறைகளை ஈவிரக்கமின்றி சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மதியாமல் தகர்த்தெறிந்தது. மிலேச்சத்தமான செயற்பாடுகளில் ஈடுபட்ட இராணுவம் இன்றைய சமாதானச்சூழ்நிலையிலும் இத்தகைய செயற்பாடுகளை கைவிடுவதாக இல்லை.

இன்றைய சமாதான சூழ்நிலையிலும் நாங்கள் சுதந்திரமான முறையில் எமக்காகத் தம்மைத் தியாகம் செய்தவர்களின் நினைவுகளை அனுஷ்டிக்க அரச படையினர் முட்டுக்கட்டை போட்டு நிற்கின்றார்கள். மாவீரர் தின வளைவுகளை கட்டவிடாது மறிப்பதிலும், சிவப்பு-மஞ்சள் கொடிகளை பறக்கவிடாது தடுப்பதிலும், மக்கள் - எழுச்சி நிகழ்வுகளில் பெருந்திரளாக பங்குபற்றுவதைத் தடுப்பதிலும் மிக மும்மரமாக படையினர் ஈடுபட்டுவருகின்றனர்.

இவ்வாறான அரச படையினரின் அடக்கு முறைகள் தமிழீழ மக்களாகி எமக்கு புதிதானதல்ல. கடந்த 50 வருட சிங்கள ஆட்சியில் பல்வேறு விதமான அடக்கு முறைகளை தமிழ் மக்களாகி நாம் சந்தித்து இருக்கிறோம். இத்தகைய அடக்கு முறைகளை எதிர்த்துப் போராடி தகர்த்தெறிந்து வெற்றியும் ஈட்டி இருக்கின்றோம்.

ஆகவே, தமிழ் மக்களாகிய நாங்கள் இன்று இடம்பெறும் அரச படையின் அர்ப்பத்தனமான அடக்கு முறைகளைக் கண்டு அடங்கி வாழமாட்டோம் என்பதனை அரசிற்கும், சர்வதேச சமூகத்திற்கும் எடுத்துரைக்க இம்மாவீரர் தின நிகழ்வுகளில் எழுச்சி பூர்வமாக பங்கு பற்றவேண்டிய கடமைப்பாடு எமது மக்கள் எல்லோருக்கும் உண்டு.

எனவே,மக்களாகிய நாங்கள் இந்த மாவீரர்தின நிகழ்வுகளில் சிறப்பாக பங்கு பற்றுவதன் மூலமே எமக்காக தம்மை அர்ப்பணித்த மாவீர்களின் தியாகத்திற்கு நாம் செய்யும் நன்றிக்கடனாக இருக்கும். என அந்த அறிக்கையில் மேலும் தெரிக்கப்பட்டுள்ளது.

## கைதடி சிறுவர் இல்ல விவகாரம் சந்தேக நபர்கள் மீது சட்ட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கைதடியில் அமைந்துள்ள சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்த சிறுவர்கள் மீது, பாலியல் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பாக கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு சட்டமா அதிபரினால் உயர்நீதிமன்றிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகத்தின் பேரில் மேற்படி மூவரும், இந்தச்சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டிருந்தனர். இந்த வழக்குத் தொடர்பாக ஏற்கனவே விசாரணைக்கு எடுக்கப்பட்டிருந்தது. இருந்தும் மீள்விசாரணை டிசம்பர் 1 ஆம் திகதி நடக்குமென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# எழுவைதீவில் கடற்தொழிலாளர் மீது கடற்படையினர் சோதனை கெடுபிடி!

(எழுவைதீவு)

எழுவைதீவு கடற்தொழிலாளர் மீது கடற்படையினரின் கெடுபிடிகள் அண்மைக்காலமாக அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இங்குள்ள இறங்குதுறையில் வைத்து மீனவர்களால் பிடிக்கப்பட்ட மீன்கள் யாழ்ப்பாணத்திற்கு விற்பனைக்காகப் படகில் ஏற்றிச்செல்லப்படுவதாகவும், இவ்வேளையிலே கடற்படையினர் கெடுபிடிகளை மேற்கொள்வதாகவும் கூறப்படுகின்றது.

கடந்த வியாழக்கிழமை படகில் மீன்களை ஏற்றி படகு புறப்படுவதற்குத் தயாராக இருந்தவேளை, திடீரெனத் துறைக்கு வந்த கடற்படையினர் ஏற்றப்பட்டிருந்த சகல மீன் பைகளையும் நிலத்தில் கொட்டி சோதனை செய்ததாகவும், ஐஸ்பெட்டியினுள் வைக்கப்பட்டிருந்த இறால்களைக் கொட்டி சோதனை செய்ய முற்பட்டவேளை படையினருக்கும் தொழிலாளருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டதாகவும், பின்னர் அதனை சோதனை செய்யாது விட்டதாகவும் கூறப்படுகின்றது. மேலும் நடுக்கடலில் வைத்து மீன்பிடிப்படகுகளில் இருந்து படகுகளில் மீன்களை ஏற்ற வேண்டாம் எனப் படகோட்டிகள் எச்சரிக்கப்பட்டனர். இறங்குதுறையில் வைத்து மீன்களைப் படகுகளில் ஏற்றுவதற்கு கடற்றொழிலாளர் சங்கம் காரைநகர் கடற்படைத் தளத்தில் அனுமதி எடுத்திருப்பதாகவும் ஆனால், இங்குள்ள கடற்படையினர் தம்மீது கெடுபிடிகளை மேற்கொள்ளவதாகவும் தொழிலாளர்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

அண்மைக்காலமாக இங்குள்ள கடற்படையினர் பயணிகள் மீதான சோதனை நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியிருப்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

(83)

## 7 மாகாண சபைகளுக்கான தேர்தல் அடுத்த வருடத்தில் நடத்த ஏற்பாடு!

(கொழும்பு)

வடக்கு கிழக்கு தவிர 7 மாகாண சபைகளுக்கான தேர்தல் அடுத்த வருடத்தில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக, உள்ளூராட்சி மாகாண சபைத் தலைவர் தெரிவித்தார்

வடமேல் மாகாண சபைகளின் ஆயுட்காலம் 2004 ஜனவரி மாதத்துடன் முடிவடைகின்றது. எனவும் ஊவா மற்றும் மத்திய மாகாணங்களின் ஆயுட்காலம் 2004 ஏப்பிரல் மாதத்துடனும், சப்பிரகமுவ, வடமத்திய, மேல் மாகாண ஆயுட்காலம் எதிர்வரும் 2004 மே மாதத்துடனும், தென்மாகாண சபை ஆயுட்காலம் யூலை மாதத்துடனும் முடிவடைவதால், இந்த 7 மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் அலுக் அலுவிகார தெரிவித்தார்.

# தேசிய அரசு அமைக்கும்
# ஜனாதிபதியின் முயற்சி பலிக்குமா?

## தெற்குத் திசையினிலே

### கொழும்பிலிருந்து இந்திரஜித்



இலங்கையின் அரசியல் நெருக்கடி நிலை தீவிரதன்மையை அடைந்திருக்கிறது. ஜனாதிபதி எதிர்வரும் 15 ஆம் திகதியை அரசியல் நெருக்கடி நிலையை தீர்ப்பதற்கு இறுதி திகதியாக அறிவித்துள்ளார். பல்வேறு நாடுகளிலும் அரசியல் நெருக்கடிகள் வருவதுண்டு. ஒரு தரப்பின் ஆட்சியில் மக்கள் அதிருப்தியுறும்போது, அதற்கு எதிராக மக்கள் ஆதரவு பெற்ற தரப்பு ஆட்சியை கைப்பற்ற முன்வருவது இயல்பு. ஆனால், இலங்கையைப் பொறுத்தவரையில் தற்சமயம் நிலைமை மாறுபட்டவிதத்தில் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.

ஐக்கிய தேசிய கட்சி தமது 17 வருட ஆட்சி அதிகாரத்துடன் ஏற்படுத்திக் கொண்ட 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் கீழான, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை இன்று அந்தக் கட்சிக்கே பாதிப்பை ஏற்படுத்தும் வகையில், பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதியினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று, ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியை கைப்பற்றியதோ, அன்றே ஜனாதிபதி அந்த ஆட்சியை மீளக்கைப்பற்றும் ஏற்பாடுகளை ஆரம்பித்துவிட்டார்.

ஜனநாயக ரீதியாக 2001 ஆம் ஆண்டு தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கத்திற்கு, ஜனாதிபதி ஒத்துழைப்பு வழங்குவாரென எதிர்பார்க்கப்பட்டபோதும், அவரின் அணுகுமுறை மாறுபட்ட விதத்திலேயே அமைந்துள்ளது. அதேநேரம், அவர் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பை வழங்குவதை தடுக்கும் வகையில், ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் அமைச்சர்களும், ஜனாதிபதியின் மீது குற்றச்சாட்டுக்கள் பலவற்றை சுமத்தி, அவரை கோபமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்தனர். அவ்வாறான செயற்பாடு ஜனாதிபதியை இன்றைய தீவிர நிலைவரை இட்டுச் சென்றதை எவரும் மறுக்க முடியாது.

நாட்டில் சமாதான முன்னெடுப்பை மிகவும் தீர்க்கமாக முன்னெடுத்த ஜனாதிபதி - பின்னர் அதிலிருந்து பின்வாங்கிச் சென்றமை அனைவரும் அறிந்ததே. ஆனால், அதே ஜனாதிபதி- ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் சமாதான முன்னெடுப்புகளை மேற்கொள்ளும்போது, அதற்குத் தடையாக இருக்கிறார் என குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையிலான அரசியல் நெருக்கடி குறித்து, நாடாளுமன்ற சபைக்கும், நிறைவேற்று அதிகாரத்திற்கும் இடையிலான மோதல் இன்று சர்வதேச அளவில் கவனத்தை ஈர்த்துள்ளது.

இலங்கைக்கு உதவி வழங்கும் ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் உட்படப் பல நாடுகள் இந்த விடயத்தை விமர்சனம் செய்துள்ள அதேநேரம் - நோர்வே தமது சமாதான ஏற்பாட்டாளர் நிலையிலிருந்து, தற்காலிகமாக விலகியுள்ளது. இவையாவும் இலங்கையின் ஜனாதிபதியையே முதலில் குற்றம் சுமத்தியுள்ளன. ஜனாதிபதி தற்போதைய சமாதான சூழ்நிலையில் மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றமை - நாடாளுமன்றத்தை ஒத்திவைத்தமை யாவும் சர்வதேச நிதியுதவிகளில் பின்னடைவை ஏற்படுத்தும் என, இந்த நாடுகள் எச்சரித்துள்ளன. ஆனால், ஜனாதிபதியின் தரப்போ இதுவரை இது தொடர்பில் எவ்வித பதிலையும் வழங்கவில்லை.

ஜனாதிபதியைப் பொறுத்தவரையில், அண்டை நாடான இந்தியா இதுவரை நிகழ்வு தொடர்பாக எதுவுமே திறந்தநிலை கருத்துச் சொல்லவில்லை என்ற விடயத்தில் தமது நம்பிக்கையை உறுதுணையாகக் கொண்டுள்ளார். இலங்கையில் ஏதாவது பிரச்சினைகள் ஏற்படும்போது, இந்தியா எப்போதும் தமது கருத்தை உடனடியாக வெளிப்படுத்துவதுண்டு. அது போலவே, பிரச்சினையை தீர்த்துக்கொள்ள வழிகளையும் சொல்வதுண்டு. ஆனால், இந்த விடயத்தில் அதன் மௌனப் போக்கு சிந்திக்கவே செய்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - அண்மையில் இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கு இணங்கிவந்தபோதும், அதன் ஏனைய நாடுகளுடனான நட்பு விடயங்கள்- இந்தியாவை பொறுத்தவரை சற்று அதிருப்தியையே கொடுத்துள்ளமை நோக்கத்தக்கது. இந்தியா தெற்காசிய வல்லரசு என்ற தொனியில் எப்போதும் இலங்கை விடயத்தில் தலையிடும்போது - அமெரிக்கா, நோர்வே, மற்றும் ஜப்பான் போன்ற நாடுகள் இலங்கையின் விடயங்களில் தலையிடுவது அதற்கு விருப்பமில்லை. இதற்கு ஒரு உதாரணத்தைக் கூறலாம்.

நோர்வே மற்றும் அமெரிக்கா தலையீடுகளின்போது, பெரிதாக கருத்துக் கூறுதல் அல்லது தமது வெளிப்பாட்டை தெரிவிக்காத இந்தியா, ஜப்பான் - இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் தலையிடுவதை விரும்பவில்லை. அமெரிக்க வல்லரசு என்ற அடிப்படையில், இந்தியாவிடம் இலங்கை விடயங்கள் தொடர்பாக கருத்துப் பரிமாறல்களை செய்து கொள்ளத்தேவையில்லை என நினைக்கிறது. அதேநேரம் இந்தியாவும் இது தொடர்பாக வெளிப்படையான கருத்துக்களைக் கூறுவதில் இருந்து தம்மை தவிர்த்து வருகிறது. ஆனால், ஜப்பானும், நோர்வேயும் மாற்று நிலைப்பாடுகளைக கொண்டுள்ளன. தாம் இலங்கை விடயத்தில் தலையிடும் போதெல்லாம், அது சம்பந்தமாக இந்தியாவிடம் விளக்கம் அளிக்கும் செயன்முறையை இந்த நாடுகள் பின்பற்றி வருகின்றன.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்டதை அடுத்து, இலங்கை விடயத்தில் தலையிடாத அதேநேரம், நோர்வே இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஏற்பாட்டாளராகச் செயற்பட முன்வந்த போது, அதற்கு எதிர்ப்புகள் எவற்றையும் வெளியிடவில்லை. ஆனால், இலங்கையில் காணப்படும் எந்த ஒரு தீர்வும் நமது நாட்டைப் பாதிக்கும் வகையில் அமைந்துவிடக்கூடாது என்பதில், அது கவனமாக இருந்து வருகிறது. இது இவ்வாறிருக்க, ராஜீவ் கொலையின் பின்னர் இலங்கையின் பிரச்சினையில் குறிப்பாக, இலங்கை நாட்டின் இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியா தலையிடுவதை தவிர்த்து வந்தது.

இந்தியா, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் சரி என எண்ணுகிறதா? அல்லது பிரதமர் அமெரிக்கா உட்பட மேலைத்தேய நாடுகளுடன் மேற்கொண்டுவரும் உறவு முறைகளுக்கு எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில், மௌன நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்கிறதா? என்பதெல்லாம் வெளிச்சத்துக்கு வராத விடயங்கள் ஆகும்.

மறுபுறத்தில் பாதுகாப்பு விடயங்களில் இந்தியா எப்போதும் விழிப்பு நிலையையே கடைப்பிடித்து வருகிறது. இலங்கையில் அதிகார பிரச்சினை ஏற்பட்ட வேளையில், அது தொடர்பில் அதிக அக்கறை செலுத்த இந்தியா இந்த நடவடிக்கைக்குக் காரணமாக தமிழீழ விடுதலைப்புலிகளுடனான போர் நிறுத்த ஒப்பந்தம் செயலிழக்கும் என்ற எண்ணத்தில், தமது நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்திக் கொண்டு, இதுவரை இலங்கையின் அருகே அரசியல் நடவடிக்கைகளில் மாற்றங்கள் ஏற்படவில்லை. இது, நடைமுறைச் சமாதானத்தை கேள்விக்குரியதாக்கி உள்ளதுடன், நாட்டின் பொருளாதாரத்தை வெகுவாகவே பாதித்துள்ளது.

இலங்கைக்கு ரோக்கியோவில் இணங்கிக் கொடுக்கப்பட்ட 4.5 பில்லியன் டொலர்கள் நிதி உதவியில் கூட இந்தப் பிரச்சினை பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான சூழ்நிலையில்தான், ஐக்கிய தேசிய கட்சியின் மூன்றாவது வரவு - செலவுத் திட்டத்தின்போது, பொதுமக்களுக்குரிய பல நிவாரணங்களை வழங்கமுடியாதுபோன அரசாங்கம் இந்த முறையில் சில நிவாரணங்களை வழங்க முன்வந்துள்ளது. கடந்த இரண்டு வருட இயல்புசூழ்நிலை இதற்கு காரணமாகும். ஆனாலும், 20 வருட போர் காரணமாக வாழ்க்கைச் செலவுகளில் பாரிய தாக்கத்தை எதிர்நோக்கியுள்ள பொதுமக்களுக்கு முழுத் திருப்தியை தரவில்லை என்பது தெளிவு.

தற்போதைய சூழ்நிலையில் எதிர்த்தரப்பிலும், பொருளாதார நிலைகளைக் கருத்தில் கொள்ளாமல், தமது அரசியல் ரீதியான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன. ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் வரவு- செலவுத் திட்டம், முழுமையாக மக்களை ஏமாற்றியிருப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன. இவர்கள் சுதந்திரம் பெற்றது முதல் எந்த ஒரு வேளையிலும் அதிருப்தி கூறும் கருத்துக்களை அல்லது செயற்பாடுகளை எதிர்கட்சி விமர்சிப்பது அல்லது எதிர்ப்பது என்ற தன்மைகளே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதில் ஒரு கட்டமே தற்சமயம் வரவு - செலவுத்திட்டம் தொடர்பிலும் நிகழ்கிறது.

இலங்கையில் உண்மை அரசியலைப் பார்க்கவேண்டுமானால், இரண்டு கட்சிகளும் (பொதுஜன முன்னணியும், ஐக்கிய தேசிய கட்சியும்) நாட்டின் பொருளாதார நலிவுக்குக் காரணமாக இருந்துள்ளன. உரிய திட்டமிடப்படாத பொருளாதாரத்தைக் கொண்டு இதில் தேசிய கொள்கை எவையும் வகுக்கப்படாமை, இரண்டு கட்சிகளுமே தமிழர்களின் பிரச்சினைகளை உரியவிதத்தில் அணுகாமை, வெற்றிபெற முடியாத யுத்தம் ஒன்றுக்கு முழு பொருளாதார வளங்களையும் செலவிட்டமை போன்றவை இரண்டு கட்சிகள் மீதும் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளாகும்.

எனவே, வரவு - செலவுத் திட்டமோ அல்லது ஏனைய அபிவிருத்தித் திட்டங்களோ நடைமுறைப்படுத்தப்படும்போது, அதில் இரண்டு கட்சிகளின் கருத்துக்கள் உள்ளடங்கியிருப்பது, எதிர்காலத்தில் நாட்டிற்கு நன்மை பயக்கும் இல்லையேல், நாடு மேலும் 50 வருடங்கள் தவிர்க்கமுடியாத வீழ்ச்சிநிலைக்குச் சென்றுவிடும். இதில் 50 வருடங்களின் பின்னோக்கிய பொருளாதாரத்தை நாம் குறிப்பிட முடியாது. ஏனெனில், சுதந்திரம் கிடைத்த காலப்பகுதியிலோ அல்லது அதற்குப் பின்னரோ குறிப்பிட்ட கால எல்லையில் இலங்கையின் பொருளாதாரம் இன்று இருக்கும் அளவிற்கு மோசமாக இருக்கவில்லை. இன்று இருப்பதைப்போன்று அன்று மக்கள் கடனாளிகளாக இருக்கவில்லை.

நடைமுறையில் இலங்கை மீளமுடியாத பொருளாதாரக் கஷ்ட நிலைக்குச் செல்லக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. ஏனெனில், சமாதான முனைப்புகளில் ஏற்பட்டுள்ள பின்னடைவு, மீள் இயலாத நிலைக்குக் கொண்டு வரப்படும்வரை, வெளிநாட்டு உதவிகள் இலங்கைக்குக் கிடைக்கப்போவதில்லை. எனவே எதிர்கால பொருளாதார வீழ்ச்சிக்குத் தற்போதைய அரசியல் நெருக்கடி காரணமாக அமைந்துவிட்டது எனலாம்.

அரசியல் நெருக்கடிக்கு மத்தியில், இலங்கையில் மாற்று அரசுக்கான அதாவது தேசிய அரசுக்கான முனைப்புகள் இன்னமும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ஜனாதிபதிக்கோ அல்லது ஜனாதிபதியின் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கோ விரைவில் தேர்தல் ஒன்றைச் சந்திக்க விருப்பமில்லை. தேர்தல் ஒன்று வருமாக இருந்தால், அது தற்போதைய நிலையில் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு பாதகமாகவே அமையும். அதுவும் மக்கள் விடுதலை முன்னணியுடன் கூட்டு ஒன்று ஏற்படுத்திக் கொள்ளமுடியாத நிர்ப்பந்தத்தில் இது சாதகமாக அமையாது.

இந்த நிலையில் மக்கள் விடுதலை முன்னணியுடன் கூட்டு ஒன்று ஏற்படுத்திக்கொள்ள, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு தரப்பினர் முயன்று கொண்டிருக்க, ஜனாதிபதியும், அவரின் நெருங்கியவர்களும் இதில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு அஸ்தமனம் ஏற்பட்டுவிடுமோ? என அஞ்சுகின்றனர். எனவே கடந்த 19 ஆம் திகதி செய்துகொள்ளப்படவிருந்த மக்கள் விடுதலை முன்னணியுடனான ஒப்பந்தம் பின்தள்ளிப்போயுள்ளது.

அந்நேரம், ஜனாதிபதி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து மக்கள் விடுதலை முன்னணியின் ஒரு சிலரையும் இணைத்துக் கொண்டு, தேசிய அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கின்றார். இதற்கு வர்த்தகப் புள்ளிகளான ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் சமரவிக்கிரம, ஜனாதிபதியின் ஆலோசகர் மனோதித்த வெல்லவும் முயன்று வருகின்றனர். ஜனாதிபதி தேசிய அரசில் 10 அமைச்சர்கள் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு வேண்டுமென



கோரியுள்ளார். ஆனால், அதற்கு முன்னர் தான் பொறுப்பேற்ற 3 அமைச்சுக்களையும் மீண்டும் தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என பிரதமர் எதிர்பார்க்கின்றார். இதற்கு மத்தியில் இணக்கம் ஒன்றைக் கொண்டுவரவே சமரவிக்கிரம முயன்று வருகிறார். இந்த முயற்சி ஜனாதிபதியின் கால நிர்ணயப்படி எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பலிக்குமா? என்பது இன்றைய எதிர்பார்ப்பு.

---

# கலப்பற்ற மகிழ்ச்சியை அனுபவித்து மகிழுங்கள்

எத்தனையோ பிறந்த தினங்களை மானிடம் கொண்டாடி இருக்கின்றது. இன்னும் கொண்டாடும். ஆனால் இந்தப் பூமியில் இந்தக் கால கட்டத்தில் வாழும் நாம் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் பக்தர்கள் ஒரு அவதாரத்தின் பிறந்த தினத்தை கடந்த 50 ற்கும் மேற்பட்ட ஆண்டுகளுக்கு மேலாக கொண்டாடி வருகின்றோம்.

சிவம் என்ற மங்களத்தை தெய்வீகத்தைப் பெற்று அந்தப் பிறந்த நாளை நாம் கொண்டாட வேண்டும் என்பதுதான் பகவானின் பிறந்த தினம் தரும் செய்தி. விண்ணகத் தேவரும், நண்ணவும் மாட்டா விழுப்பொருள் எமது கண்ணகத்தே வந்து மகிழ்ச்சியைத் தருவதன் நோக்கம் இதுதான், பிறந்த தினச் செய்தி வாழ்க்கையில் எது மிகவும் முக்கியமானது என்ற கேள்வியைக் கேட்டு பகவான் அதற்கு விடை கூறுகிறார்.

தெய்வீகத்துடன் நெருக்கமான உறவை ஏற்படுத்த வேண்டும். தெய்வீகத்துடன் நெருங்கி வருகிறபொழுது தெய்வீக சக்தியினால் நிரம்பப் பெறுவீர்கள் கடவுளுடைய கூட்டுறவில் வாழ்வதுதான் உண்மையான சத்சங்கம்

(ஆங்கில சனாதன சாரதி ஜூலை 2001 - ப- 201) உண்மையான கூட்டத்தில் இணைந்து ஆத்மீக அறிவைப் பெற்று தெய்வீகத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். சாதனை என்பது ஜப, தியானங்களோடு மட்டுப்படுத்தப்படாமல் எம்முள் உள்ள மாயத்திரைகளைக் கிழித்தெறிந்து, உண்மையைக் காணக்கூடியவர்களாக எங்களை ஆக்க வேண்டும்.

கடைசியாக 2000 ஆம் ஆண்டு தமது பிறந்த தின விழாவில் பகவான் தந்த ஆசிமொழிகளுடன் இதனை நிறைவு செய்வோம்.

உங்களுக்கெல்லாம் நிலையான பக்தியுடன் கூடிய ஆன்மீகம் நிறைந்த நீண்ட மகிழ்ச்சியான வாழ்க்கை அமைய வாழ்த்துகிறேன்.

உங்கள் எல்லோருக்கும் இது கிடைக்கட்டும், இவை யெல்லாம் கிடைக்கட்டும்.

உங்கள் கஷடங்கள் துயரங்கள் எல்லாம் விலகட்டும்.



ஏதாவது துன்பம் உருவானாலும் அவையெல்லாம் பற்றி நினைத்து உங்கள் மனோ சத்தியை வீணாக்காமல் உங்களுக்குக் கிடைக்கக் கூடிய ஒரு சிறிதும் கலப்பற்ற ஆனந்தத்தையும், மகிழ்ச்சியையும் நீங்கள் அனுபவித்து மகிழுங்கள் என ஆசி கூறுகிறேன்.

சாயியுடன் மு. க. சிவபாதவிருதயர்

# ஈராக்கில் இரு பொலிஸ் நிலையங்கள் மீது தற்கொலைத் தாக்குதல்; பதினாறு பேர் பலி!

## சரக்கு விமானம் மீதும் தாக்குதல்



பாக்தாத்தின் வடபகுதியிலுள்ள நகரங்களான கான் பனி சாட் மற்றும் பகுபா ஆகிய இடங்களில் நேற்று நடைபெற்ற கார்க்குண்டு வெடிப்புக்களில் குறைந்தது 16 பேர் கொல்லப்பட்டதாக ஈராக்கியப் பொலிஸார் தெரிவித்தனர்.

கான் பனி சாட் பிரதேசத்திலுள்ள பொலிஸ் நிலையம் மீது வெடிமருந்து நிரப்பப்பட்ட கார் வந்து மோதியபோது, அது வெடித்துச் சிதறியதாகவும், இதன்போது ஆறு ஈராக்கியப் பொலிஸார் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலையடுத்துப் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மற்றைய தாக்குதல் - முதலாவது சம்பவம் நடைபெற்ற பிரதேசத்திலிருந்து 15 மைல்களுக்கு அப்பாலுள்ள பகுபா என்ற இடத்தில் அமைந்த பொலிஸ் நிலையம் மீது மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலும் வெடிகுண்டு நிரப்பிய கார் மூலமே மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது 7 பேர் கொல்லப்பட்டனர். 12 இற்கு மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் நடைபெற்ற இரு இடங்களும் சதாம் ஹீசைனின் ஆதரவாளர்கள் வசிக்கும் பிரதேசம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பொதிகள் ஏற்றி இறக்கும் டீ.ஏச்.எல் ரக விமானம் பாக்தாத் விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட சிறிதுநேரத்தில் 'சாம்-7' ஏவுகணையின் தாக்குதலுக்கு இலக்காகி உடனடியாகத் தரையிறக்கப்பட்டது.

ஏ - 300 என அழைக்கப்படும் இந்த விமானம் பாக்தாத்திலிருந்து பஃரேன் நோக்கிச் சென்றவேளையே தாக்குதலுக்கு இலக்கானதாகக் கூறப்படுகிறது. தாக்குதலுக்கு இலக்காகி விமானத்தின் இறக்கை ஒன்றில் தீப்பற்றிக்கொண்டதாகவும், விமானம் உடனடியாகத் தரையிறக்கப்பட்டதால் - அனர்த்தங்கள் தவிர்க்கப்பட்டதாகவும் டீ.ஏச்எல் அதிகாரி பற்றீசியா தொம்சன் தெரிவித்தார்.

இந்த விமானத்தில் மூன்று விமானப் பணியாளர்கள் இருந்ததாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

# உலக நோக்கு

## 1980 தொடக்கம் 2000ஆம் ஆண்டுவரை

# பெரு நாட்டில் இடம்பெற்ற கொலைகளுக்கு தற்போதைய ஜனாதிபதி மன்னிப்பு கோரினார்!



1980 ஆம் ஆண்டு முதல் 2000 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் பெரு நாட்டில் அரசியல் வன்முறைகளினால் 40 ஆயிரத்திற்கும் மேற் ட- ஆதிக்குடியினர் கொல்லப்பட்டதற்கு - தற்போதைய ஜனாதிபதி ரெலேடோ மக்களிடம் மன்னிப்புக் கோரியுள்ளார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மில்லியன் டொலர் செலவில் புனருத்தாரணப் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த மனிதப் படுகொலைகள் நடைபெற்ற காலத்தில் தான் ஆட்சியில் இருக்கவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கொலைகளில் பெரும்பாலானவை அங்குள்ள இரு போராளிக் குழுக்களினால் மேற்கொள்ளப்பட்டதாகவும், 30 வீதமான கொலைகளையே அரசு செய்துள்ளதாகவும்- பெரு நாட்டில் இடம்பெற்ற கொலைகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட அமைப்புத் தெரிவித்துள்ளது.

# அமெரிக்க அமைப்புக்கள் தாக்குதலுக்கு இலக்காகலாம்!

## அந்நாட்டு அரசு எச்சரிக்கை

(நியூயோர்க்)

வெளிநாடுகளிலுள்ள அமெரிக்க அமைப்புக்கள் மீது அல்கொய்டா புதிய தாக்குதல்களை மேற்கொள்வதற்கான சாத்தியங்கள் இருப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

அண்மையில் துருக்கியின் தலைநகர் இஸ்தான்புல்லில் நடைபெற்ற குண்டுத்தாக்குதல்களில் 50 இற்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதை அடுத்தே அமெரிக்கா மேற்படி எச்சரிக்கையை விடுத்துள்ளது.

துருக்கியில் அண்மையில் நடைபெற்ற தாக்குதலுக்கு அல்-கொய்டா அமைப்புக்கு தொடர்பு இருப்பது அறியப்பட்டுள்ளதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

பிரித்தானியாவும், அமெரிக்காவும் தமது பிரஜைகளை அவசிய தேவை ஏதும் இருந்தால் மட்டுமே துருக்கிக்கு செல்லுமாறு கேட்டுள்ளன.

# ஈரான் தொடர்பான ஐ.நாவின் கருத்தை அமெரிக்க அரசு குறைகூறியுள்ளது!



ஐ.நாவின் அணு ஆயுதக் கண்காணிப்பு அமைப்பு - ஈரானின் அணு ஆயுதங்கள் தொடர்பாக வெளியிட்ட கருத்துக்கள் அந்த அமைப்பின் மீது கொண்டிருந்த நம்பிக்கையைக் குறைத்துள்ளதாக, அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

ஈரானில் அணுசக்தி ஆயுதங்கள் உற்பத்தி செய்ததற்கான ஆதாரங்கள் இல்லையென, அணுஆயுதக் கண்காணிப்பு அமைப்பு அண்மையில் தெரிவித்திருந்தது.

18 ஆண்டுகளாக ஈரான் தனது அணுஆயுதத்திட்டங்களை மறைத்து வைத்துள்ளதென இதுவரை தெரிவித்துவந்த ஐ.நா அணுஆயுதக் கண்காணிப்பு அமைப்பினால் - அதை நிரூபிக்க முடியாதிருப்பது கேள்விக்குரியதாக இருப்பதாக, அந்த அமைப்பிற்கான அமெரிக்க அதிகாரி கெனிற் பிறில் தெரிவித்தார்.

கடந்தகால நிகழ்வுகள் மூலமாக ஈரான் அணுஆயுதம் தொடர்பாக ஏமாற்றமுயல்வதாக அந்த அதிகாரி மேலும் குற்றஞ்சாட்டினார்.

# அஸாம் மாநிலத்திலுள்ள தொழிற்சாலையில் தீவிரவாதிகளின் தாக்குதலில் எட்டு பேர் பலி!



அஸாம் மாநிலத்தின் சுகியா மாவட்டத்தில் செங்கட்டித் தொழிற்சாலை ஒன்றில் கடமையாற்றிய பீஹாரைச் சேர்ந்த 8 பேர் தீவிரவாதக்குழு ஒன்றினால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

அஸாமின் ஐக்கிய விடுதலை முன்னணியே இந்தக் கொலைக்குக் காரணமென- அஸாம் பொலிஸார் தெரிவித்தனர்.

பீஹாரிலிருந்து கூலிவேலைக்காக அஸாமுக்கு வந்தவர்களே கொலலப்பட்டனர். ரயில்வே திணைக்களத்தில் வேலைசெய்வதற்கு தெரிவுசெய்யப்பட்டவர்களே இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் அதிகம் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பீஹாரிலிருந்து அஸாம் மாநிலத்துக்கு வந்து வேலைசெய்பவர்களினால்- அஸாம் மாநிலத்தவர்களுக்கு வேலையில்லா நிலை ஏற்பட்டுள்ளதாக அஸாம் போராளிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கடந்த வாரத்தில் மட்டும் அஸாம் மாநிலத்தில் 33 பேர்வரை கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சூடானில் இந்த வருடம் முடிவடைவதற்குள் சாமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும்!

## மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தெரிவிப்பு

சூடானில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் கிராங் இவ்வருட முடிவுக்குள் சமாதானத்திற்கான பேச்சுக்களை சூடான் ஆரம்பிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாக - அமெரிக்க இராஜங்க அமைச்சர் கொலின்பவலுக்கு அறிவித்துள்ளார்.

சூடானில் இரு தசாப்தங்களாக நடைபெற்றுவந்த உள்நாட்டுப்போர் புனித ரம்ழான் மாதத்தினை முன்னிட்டு - தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

ஆட்சி அதிகாரத்தில் உள்ள முஸ்லிம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இடையே கடந்த 20 ஆண்டுகளாகப் போர் நடைபெற்று வந்த யுத்தத்தில் இதுவரை 1.5 மில்லியன் மக்கள் மரணமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.



# ஊர்சுற்றி எழுதுவது

இலங்கைக் கடற்படைக்கு - இஸ்ரேலிடமிருந்தும், அமெரிக்காவிடமிருந்தும் நீண்டதூர பீரங்கிகளைக் கொள்வனவுசெய்யும் நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதாக கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி தெரிவித்திருக்கிறார்.

இலங்கைக் கடற்படையினருக்கு பயிற்சிகளை வழங்க பிரான்ஸ் கடற்படையினர் முன்வந்துள்ளனர். கடற்படைத் தளபதி தயா சந்தகிரியும், பிரான்ஸ் கடற்படையினரும், இந்து சமுத்திர பிராந்தியத்திற்கான கடற்படைக் கட்டளைத் தளபதியும் கொழும்பில் சந்தித்துப் பேசிய வேளை இந்தப் பயிற்சியளிப்பது பற்றி ஆராயப்பட்டதாம்.

இதேசமயம், சர்வதேச ரீதியில் மகத்தான ஆதரவைப்பெற்று, சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டு வந்த இலங்கையின் சமாதான முயற்சிகள், முடிந்த வரையில் மிகவிரைவில் தொடரப்படவேண்டுமென்று - இலங்கைக்கான ஜப்பானிய விசேட பிரதிநிதி யசூசி அகாஷி, தம்மை டோக்கியோவில் சந்தித்த இலங்கை அமைச்சர் மிலிந்த் மொறகொடவிடம் தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் ஏற்பட்டிருக்கும் அதிகாரப் போட்டியை, விரைவில் ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து சமாதான முயற்சியைத் தொடர்ந்து, நல்லமுடிவு காணவேண்டும் என்று ஜப்பான் சொல்கிறது, அமெரிக்கா கூறுகிறது, ஐரோப்பிய யூனியன் கேட்கிறது இந்தியாவும் இடித்துரைக்கிறது, இன்னும் பல நாடுகளும் சமாதான முயற்சியை தாமதப்படுத்தாமல் தொடரவேண்டுமெனக் கூறுகின்றன.

உலக நாடுகள் பலவும் - வல்லரசுகள் உட்பட, இலங்கையில் சமாதானம் ஏற்படவேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றன. இதனால், மீண்டும் இலங்கையில் ஒரு போர் வருவதற்கு வாய்ப்பில்லை என்றார் நண்பர்.

அப்படியானால், கடற்படைக்கு நீண்டதூர பீரங்கிகள் வாங்குவதற்கு இப்போது என்ன அவசரம்? கடற்படை எந்த அந்நிய நாட்டுடன் பாதுகாப்புக்காக மோதப்போகிறது. இந்தியாதான் இலங்கையின் பாதுகாப்புக்குத் தயாராக இருக்கிறது என்று சொல்கிறார்கள்.

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு எந்த ஆபத்தும் இல்லை, வேறு எந்த நாட்டிலிருந்து இலங்கைக்கு ஆபத்து வரப்போகிறது. அதுவும் கடல் வழியாக எந்த நாட்டிடமிருந்து ஆபத்து வரும் என்று கடற்படை எதிர்பார்க்கிறது.

விடுதலைப் புலிகளால்தான் ஆபத்து என்றும், அவர்களிடம் நான்காவது பெரிய கடற்படை இருக்கிறதென்றும், கதிர்காமர் சிலகாலத்துக்கு முன்னெச்சரிக்கை செய்திருந்தது மறந்துபோச்சா?

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சைத்தொடர்ந்து, நல்ல முடிவெடுக்கவேண்டும் என்று, அமெரிக்காவும் மற்றய நாடுகளும் அரசுகளும்தானே வற்புறுத்திவருகின்றன?

சமாதானப் பேச்சு வெற்றிபெறும் என்ற நம்பிக்கை, இலங்கை கடற்படைக்கும், அரசுக்கும் இல்லைப்போல் இருக்கிறது. அதனால், அது நீண்டதூர பீரங்கிகளை வாங்குகிறது. கடற்படையைப் பலப்படுத்துகிறது.

அப்படியென்றால் - விடுதலைப் புலிகளை தனி அரசாகவும், அவர்களின் தமிழ் ஈழத்தையும் அங்கீகரித்து விட்டார்களோ? இதனால்தான் வேறொரு நாட்டிடமிருந்து பாதுகாப்பதற்காக கடற்படைக்கு நீண்டதூர பீரங்கிகள் வாங்குகிறார்கள். கடற்படைக்கு விசேட பயிற்சியும் அளிக்கிறார்கள் போல என்றார் எதிர் வீட்டுக்காரர்.

இல்லை மீண்டும் போர்மூண்டால், தரைவழியாகப் போர்செய்வதற்குப் படையில் இருந்தவர்கள் எல்லோரும் தப்பியோடிபோய்ச்சேர்ந்துவிட்டார்கள். இனிக் கடலில் இருந்துதான் தமிழர் தாயகத்திலுள்ள கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் பீரங்கித் தாக்குதல் நடத்தி, தமிழர்களை அழித்தொழிக்கலாம் என்று தீர்மானிச்சுட்டாங்கள். கடலில் இந்தியப் போர்க்கப்பல்கள் பாதுகாப்பளிப்பதற்கு, இலங்கை ஒரு ஒப்பந்தம் செய்திருக்கிறதாம் என்றார் நண்பர்.

அப்படியென்றால் சமாதானப் பேச்சு..? அதுவும் நடக்கும். அதற்கு ஆதரவு அதேசமயம் ஆயுத வியாபாரமும் நடக்கவேண்டாமா?

அம்மாவுக்கும் ஐயாவுக்கும் அதிகாரப் போட்டி நடந்தாலும், தமிழின அழிப்பிற்கு இருவரும் சளைத்தவர்களா என்ன...?

இன்னொரு விஷயம், இந்தியாவின் அழைப்பின பேரில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குழு இந்தியா செல்கிறது.

இலங்கையிலும் ஒரு காஷ்மீர் உருவாகுமா? என்று கேட்கிறார் நண்பர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்ற பின்னர் எனது சொந்த இடத்திற்கு செல்லவும் படையினர் தடை!

## நாடாளுமன்றில் மாவை உரை

பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்ற பின்னர் யாழ்ப்பாணத்தில் தனது பிறந்த பிரதேசத்தில் உள்ள வைத்தியசாலைக்கு செல்வதற்கு கூட அனுமதி வழங்கப்படவில்லை. இவ்வாறு - தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா இன்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை நிறுத்தப்பட்டுள்ளதால் வடக்கு-கிழக்கு மக்கள் கவலை அடைந்துள்ளனர்.

இதனால், வடக்கு-கிழக்கின் பொருளாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது. அவர் சுட்டிக்காட்டினார்.

ஜப்பானில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டின் போது, வடக்கு-கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கு வழங்குவதாக உறுதியளிக்கப்பட்ட 4.5 பில்லியன் டொலர் நிதி தற்போதைய நிலமையில் கிடைக்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றத்தின் அடிப்படையிலேயே இந்த நிதி வழங்கப்படும் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டது.

எவ்வாறாயினும் சமாதான நடவடிக்கைளிலிருந்து பிரதமர் விலகக் கூடாது இனப்பிரச்சனைக்கு அரசியற்தீர்வு ஒன்றை பெறுவதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும்.

வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் மக்களுக்கு சலுகைகள் வழங்கப்பட்டிருக்குமானால், அதன் மூலம்- எந்த நன்மைகளும் அவர்களுக்கு கிடைக்கப்போவதில்லை. அத்துடன் இப்பகுதிகளில் அரச சேவைகளில் தொழில்புரியும் தமிழர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவுள்ளது.

வடக்கு-கிழக்கில் அதிகமானோர் நலன்புரி நிலையங்களில் வாழ்வதாகவும் அவர் மேலும்தெரிவித்தார்.

## பல்கலை மாணவரின்...

செல்வதற்கு இடையூறு ஏற்படாமல் வளைவுகளை அமைக்கும்படி படையினரால் கூறப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, நேற்று யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மாவீரர்தின வளைவை படையினர் கூறியபடி அமைத்திருந்தனர். நேற்றிரவு 7.30 மணியளவில் அந்த இடத்திற்கு வந்த நூற்றுக்கணக்கான படையினர், அங்கு அமைக்கப்பட்டிருந்த மாவீரர் வளைவினை தமது ட்ரக் வண்டியால் சேதப்படுத்தியதுடன், அப்பகுதியில் வைக்கப்பட்டிருந்த தளபாடங்களையும் அடித்து நொருக்கினர்.

படையினரின் அடாவடித்தனத்தைத் தடுக்க முயன்ற பல்கலைக்கழக மாணவர்களை விரட்டுவதற்காக படையினர் முன்னேறிவந்த போது, தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த, இராணுவச் சிப்பாய் ஒருவரின் துப்பாக்கி வெடித்ததில் அந்தச் சிப்பாய் காயமடைந்தார்.

அதனைத்தொடர்ந்து துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தபடி படையினர் சற்று பின்வாங்கிச் சென்றனர். இரவு 7 மணியிலிருந்து 11 மணி வரை படையினருக்கும் மாணவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையையடுத்து, இந்தச் சம்பவம் தொடர்பாக, போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து, அந்தப் பகுதிக்கு வந்த கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகள் தொலைவில் நின்று நிலைமைகளை அவதானித்துள்ளனர். (ம,111)

## நாடாளுமன்றத்தை...

கொண்டுவருதலாகும். ஆனால், அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்டுள்ள வரவு - செலவுத்திட்டத்திலும் கல்வித்துறைக்கான நிதி வெட்டப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## பிரதான...

அனைவரதும் ஒத்துழைப்பு அவசியமென்றும் அவர் வலியுறுத்தினார்.

அரசாங்கம் கடந்த 2 வருட காலப்பகுதியில் கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை 50 வீதமாகக் குறைத்துள்ளது. 2001 ஆம் ஆண்டுக்கு முனன் தமது அரசாங்கத்தில் கல்விக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. இதனை நிவர்த்திக்க அரசாங்கம் கல்வித்துறையில் உரிய கவனம் செலுத்தவேண்டுமெனவும், எதிர்கால நாட்டின் வாக்குகளை வெல்லும் முயற்சிகளை கைவிட்டு நாட்டைக் காப்பதே தமது கடமையெனவும் அவர் தெரிவித்தார். (01)

## மாவீரர்களின்...

வுள்ள மாவீரர்நாள் நிகழ்வை அனுஷடிப்பதற்கு, மட்டக்களப்பிலுள்ள தரவை, கஞ்சிக்குடிச்சாறு, தாண்டியடி, ஆண்டான்குளம் பகுதிகளில் அமைந்துள்ள துயிலும் இல்லங்கள், சிறப்பான முறையில் ஒழுங்கமைப்புச் செய்யப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகிறது. (02)

## அதிரடிப்...

அனுமதியை - விசேட அதிரடிப் படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால் லெகேக்கு வழங்கியுள்ளார்.

இந்தப் பயிற்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக, விசேட அதிரடிப்படையின் ஒவ்வொரு டிவிசனிலும் - 24 படையினரைக் கொண்ட யுனிற்கள் உருவாக்கப்படவுள்ளதாகவும், இந்தப் பயிற்சித் திட்டம் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் ஆரம்பமாகும் என, விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால் லெகே தெரிவித்தார்.

## அரசியல்...

உள்துறை ஆகிய அமைச்சுக்களை மீண்டும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திடம் கையளித்து சமாதான பேச்சுக்களை முன்னெடுப்பதற்கான முயற்சியில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

## பேச்சுகள்...

பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டதால் இவர் தனது இலங்கைவிஜயத்தை பிற்போட்டிருந்தார்.

சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற சூழ்நிலையிலே இலங்கைக்கு விஜயம் செய்வதே பொருத்தமான தருணமாக இருக்கும் எனத் தெரிவித்துள்ள ஒலரா ஒட்டுணு,

தொடர்ந்தும் யுத்தநிறுத்தம் நடைமுறையில் இருப்பதையிட்டுத் தான் மகிழ்ச்சியடைவதாகவும், ஆனால், சமாதானப் பேச்சுக்கள் மிகவிரைவாக ஆரம்பிக்கப்படும் என்று தான் நம்புவதாகவும் குறிப்பிட்டார்.

மேலும், பலமுறை இலங்கைக்கு விஜயம் செய்யத் தயாரக இருந்தேன். அத்துடன் இலங்கைக்கு விஜயம் செய்ய மிகவும் ஆர்வமாக உள்ளேன். இது ஒரு பாதுகாப்புச் சம்பந்தப்பட்ட விடயமல்ல. தற்போது தள நிலைவரத்திலேயே தாக்கியிருக்கிறது என அவர் தெரிவித்தார்.

## விடுதலைப்...

மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படாதவாறு சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல யுத்தநிறுத்த ஒப்பந்தம் முன்னோக்கி கொண்டு செல்லப்பட வேண்டும்.

இடைக்கால நிர்வாக சபை தொடர்பான யோசனை ஒன்றை விடுதலைப் புலிகள் முன்வைத்திருக்கின்றனர்.

இது அரசாங்கத்தின் யோசனைகள் அல்ல. விடுதலைப் புலிகளுடன் இந்த யோசனைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தி இணக்கப்பாட்டுக்கு வரவேண்டியது அவசியம்.

முதலில் விடுதலைப் புலிகளுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையே இருக்கும் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். அதன்பின்னர் தமிழ்மொழி பேசுகின்ற முஸ்லிம்கள் மற்றும் தமிழ்மக்களுக்கு இடையேயான இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.

மேலும், விடுதலைப் புலிகளின் யோசனைகள் குறித்து இரண்டு பிரதான கட்சிகளுக்கும் இடையே இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்துவது அவசியம்.

குறிப்பாக இறுதிப் பேச்சுவார்த்தைக்கு வரும் வேளையில் பிரதான இரு கட்சிகளுக்கும் இடையில் சிக்கல்கள் எழக்கூடாது.

இடைக்கால நிர்வாக சபை தொடர்பான இறுதி அரசியல் தீர்வின்போது மூன்று அடிப்படை விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்கும் வகையிலும் அபிவிருத்தி செய்வதற்கான அதிகாரங்களை வழங்குவது மற்றும் ஜனநாயக முறையில் செயற்படுவது ஆகிய மூன்று அடிப்படை விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என்று பிரதமர் ரணில் தெரிவித்தார். (03)

## நாற்சந்தி

"நிறைவேற்று அதிகாரங்களில் ஒரு சிலவற்றையே, தான் இதுவரை பயன்படுத்தியிருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா கூறியிருக்கிறாராமே....!

"அடடே.... அதையாவது ஒப்புக்கொண்டிருக்கிறாரே அதுவே, போதும். இல்லையேல், நான் எந்த அதிகாரத்தையும் இதுவரை பயன்படுத்தியதேயில்லை என்று சொல்லியிருப்பார்....

'அது சரி ... அவர் பயன்படுததிய சிலஅதிகாரங்களாலேயே, இந்தளவு குழப்பம் என்றால்... அவர் முழு அதிகாரத்தையும் பயன்படுத்தியிருந்தால் என்ன நடந்திருக்கும்...?

"அது சரி இனிமேல் அதனைப் பயன்படுத்தினால் என்னென்ன நடக்கப்போகுதோ...?

மணியத்தாரும்... கனகரும் சந்தித்த தேத்தண்ணிக் கடையில், மழைக்கு ஒதுங்கியவாறே புலம்பிக்கொண்டிருந்தனர்.

"என்ன இரண்டு பேரும் புலம்புறீங்க... ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரத்தை முழுதாகப் பயன்படுத்தினா என்ன நடக்குமென்று தானே... என்றபடி இடையில் நுழைந்த வாத்தியார் தொடர்ந்தார்.

"எங்களுக்கு ஒண்டும் நடக்காது பாருங்கோ... இனி அவை தங்களுக்குள்ள தான் அதிகாரப் போரைக் காட்டப்போகினம்... எங்களுக்கு எதிராகத்தான் ஷபோர் என்ற பெரிய அதிகாரத்தைப் பயன்படுத்தி செய்ய வேண்டியதெல்லாம்செய்து முடிச்சிட்டு வாங்க வேண்டியதையும் வாங்கி முடிச்சிட்டுத்தானே... தங்களுக்குள்ள சண்டையைத் தொடங்கியிருக்கினம்.

" ஓமோம், வாத்தியார் சொல்லுறது சரிதான்... இப்ப ஜனாதிபதி ரணிலைத்தானே மிரட்டுறா...அரசாங்கத்தைத்தானே அச்சுறுத்திறா... என்றார் கனகர்.

'அதுமட்டுமே... சமாதானத்தையுமல்லே அச்சுறுத்திறா...! என்றார் மணியத்தார்...

"அவாவுக்கும் கனக்க அச்சம் இருக்கு... அதாலைதான் மற்ற எல்லாரையும் அவ அச்சுறுத்திறா... என்றது, நேற்றுச் சொன்ன அதே பல்லி...

-தெருவாசி

# தீர்மானம் எடுக்காமல் முடிந்த பாதுகாப்புக் குழுவின் கூட்டம்

ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவரும் சேர்ந்து அமைத்த பாதுகாப்புப் குழுவினரின் இரண்டாவது கூட்டம் நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் நடந்த போது, எதுவித தீர்மானமும் எடுக்கப்படாமல் முடிவடைந்தது.

இந்தச் சந்திப்பில், ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம ஜனாதிபதியின் ஆலோசகர் மனோ தித்தவெல ஆகியோர் கலந்துகொண்டனர்.

நேற்றுமுன்தினம் சந்திப்பில், சமாதான முயற்சிகளின் முன்னெடுப்பு நாட்டில் பொருளாதார நிலைமை அத்துடன், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் செயற்பாடு, நோர்வேயின் மத்தியஸ்தம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், சுதந்திரமான பொலிஸ் சேவை, சுதந்திரமான தேர்தல் திணைக்களம் என்பன தொடர்பாக ஆராயப்பட்டது. இருந்தும் இரு பகுதியினராலும் ஒருமித்த கருத்துக்கு வரமுடியாத நிலையில் இந்தக் கூட்டம் தீர்மானம் எதுவும் எடுக்கப்படாமல் நிறைவேறியது.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்கள் மூலம் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முதல் தனக்கும், பிரதமர் ரணில் தலைமையிலான அரசாங்கத்துக்கும் இடையிலான வேறுபாடுகள் களையப்படடுவிடுமென ஜனாதிபதி நேற்றையதினம் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச...

நூற்றுக்கணக்கான பொலிஸார், தமிழீழ மாணவர் பேரவையைச் சுற்றி வளைத்து உள்ளே செல்ல முற்பட்டனர். இதன்போது அவர்களைத் தடுத்து நிறுத்திய இரு மாணவர்கள் பொலிஸாரினால் தாக்கப்பட்டனர். பின்னர் உட்சென்று மாணவர் பேரவை கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அங்கிருந்த 15 இற்கும் மேற்பட்ட மாணவர்களின் பெயர்களைப் பதிவு செய்த பொலிஸார், வீதியில் இராணுவத்தினரால் சேதப்படுத்தப்பட்ட வீதி வளைவுகளையும் எடுத்துச் சென்றனர்.

# ஆசிய பசுபிக் பெண்கள் அமைப்பைச் சேர்ந்த 14 பேர் கொண்ட குழுவினர் இன்று கொழும்பு வருகை!

(கொழும்பு)

ஆசிய பசுபிக் பெண்கள் அமைப்பைச் சேர்ந்த 14 பேர் கொண்ட குழுவினர் இன்று முற்சுகோ மிகி தலைமையில் இன்று கொழும்பு வரவுள்ளதாக இலங்கைக்கான ஜப்பான் தூதரகம் அறிவித்துள்ளது.

இந்த 14 பேர் கொண்ட பெண்கள் குழுவில், முன்னைய, தற்போதை அரசியலாளர்கள், இராஜதந் திரிகள் மற்றும் தொழில்சார் வல்லுநர்கள் ஆகியோர் உள்ளடங்குவர்.

இவர்களின் இன்றைய வருகையின் நோக்கம் இலங்கைக்கும் ஜப்பானுக்குமான பெண்கள் தொடர்பில் உள்ள அரசியல் நிலைப்பாடுகளையும் மற்றும் பெண்கள் தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையில் உறவை வளர்ப்பதுமாகும். இவர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சரும் பேராசிரியருமான ஜி.எல்.பீரிஸ் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் அமரா பிஜசீலி ரத்நாயக்கவையும் சந்தித்துப் பேச்சு நடத்துவார்கள் என தூதரகம் விடுத்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை - இவர்கள் தம்புள்ள, சிகிரியா, தலதாமாளிகை மற்றும் சப்புகஸ்கந்தோட்டையிலுள்ள யோசிதா சிறுவர் பாடசாலைக்கும் செல்வர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.




இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 23.11.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.